விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு

Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆடி 10 ஞாயிற்றுக்கிழமை (26.07.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 219

SATS-TECH ENGINEERS (PVT) LTD
0114562929, 0212228812, 0212225908




1 Year Subcription free with All Tamil + All sports
Including Setmax, Pogo,Cartoon network BBC,CNN

# குற்றச் செயல்களை கட்டுப்படுத்த யாழில் சிவில் பாதுகாப்புக் குழு

## மாவட்ட, பிரதேச, கிராம மட்டத்தில் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்றுவரும் சட்ட விரோத நடவடிக்கைகள், சமூக சீரழிவுகள், குற்றச் செயல்கள் போன்றவற்றை கட்டுப்படுத்த ஜனாதிபதியின் உத்தரவில் மாவட்ட, பிரதேச, கிராம மட்டங்களில் சிவில் பாதுகாப்புக் குழு உருவாக்கப்படுவதாக மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். (14ஆம் பக்கம் பார்க்க)

நிகழ்வில் கலந்து கொண்டவர்கள்...



# இலங்கை மனித உரிமை மீறலை விசாரிக்க ஐ.நாவும் அமெரிக்காவும் உதவ வேண்டும்

## மனித உரிமை ஆர்வலர்கள் வலியுறுத்தல்

(வாஷிங்டன்)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் நடவடிக்கைகளை தொடர்வதற்கு அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் உதவவேண்டும் என்று அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மினசோட்டா பல்கலைக் கழகத்தில் இலங்கையிலுள்ள இடம்பெயர்ந்தோரின் தற்போதைய நிலைவரம் குறித்து நடத்தப்பட்ட கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கல்வியாளர்கள், மாணவர்கள்,மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோருக்கு நிலைமையின் பாரதூரத் தன்மையை விளக்கும் வகையில் 'இலங்கை உள்நாட்டுப் போரும் அமைதிக்கான தேடலும்' என்ற தலைப்பில் கடந்த புதன்கிழமை (14ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை மீனவர்கள் 61 பேர் விடுதலை

இந்தியக் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை மீனவர்கள் 61 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். தமிழகம் மற்றும் ஆந்திரக் கடற்பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்ட அவர்களுடன், அவர்கள் பயணித்த 12 படகுகளும் விடுவிக்கப்பட்டுள்ளன. கடந்த 23ஆம் திகதி விடுவிக்கப்பட்ட இவர்கள் சென்னையிலுள்ள இலங்கை உதவி உயர்ஸ்தானிகராலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-14)

# தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவைக்கு

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண தமிழ் இளைஞர்கள் விரைவில் பொலிஸ் சேவைக்கு சேர்க்கப்பட்டு தமிழ்ப் பிரதேசங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் தயானந்த பண்டார தெரிவித்தார்.

யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சிவில் பாதுகாப்பு குழுக்கள் அமைத்தல் தொடர்பான மாநாட்டிலேயே பிரதிப் பொலிஸ்மா அதிபர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்டத்தில் தற்போது 4 ஆயி ரம் பொலிஸார் சேவையில் ஈடுபட்டுள்ளனர். பொது மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்பதில் பொலிஸார் அக்கறையுடனுள்ளனர்.

எனினும் ஆளணியில் பற்றாக்குறை, தமிழ் மொழிப் பிரச்சினை போன்றவற்றை நிவர்த்தி செய்வதனூடாகவே பொதுமக்களுக்கு முழுமையான சேவையை பொலிஸார் வழங்க முடியும்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் தமிழ் இளைஞர்களை பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

எனவே விரைவில் வடக்கு தமிழ் இளைஞர்கள் பொலிஸ் சேவையில் இணைக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என்றார். (ச-5)

# இலங்கையில் 2011 ஆம் ஆண்டு சனத்தொகைக் கணக்கெடுப்பு

இலங்கையில் 2011 ஆம் ஆண்டு சனத்தொகை கணக்கெடுப்பொன்று நடைபெற உள்ளது. இதற்கான நடவடிக்கைகளை இலங்கை புள்ளிவிபரத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.முதல் கட்டமாக கிராம சேவகர் வாரியாக வரைபடங்களை தயாரிக்கும் பணிகள் தற்போது மாவட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பு மாவட்டத்தின் கெஸ்பேவ தொகுதியில் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து ஏனைய பிரதேசங்களிலும் இதனை மேற்கொள்ள உள்ளதாக இலங்கை புள்ளிவிபரத் திணைக்களத்தின் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். இதேவேளை இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் 83 ஆம் ஆண்டுகளுக்கு பின்னர் உரிய சனத்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# ஒன்றுவிட்ட ஒரு நாளுக்கு யாழ்-கொழும்பு பஸ் சேவை



(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதையூடாக யாழ்-கொழும்பு, கொழும்பு -யாழ் பஸ் சேவையை ஒன்றுவிட்ட ஒரு நாளுக்கு சீராக மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஆராய்வதற்கான மாநாடு ஒன்று நாளை கொழும்பில் இடம் பெறவுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின், டக்கா வீதியில் உள்ள யாழ். பிரசார அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற (14ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மண்ணின் அனுபவமுள்ள விரிவுரையாளர்கள், கொழும்பின் துறைசார் வல்லுனர்களின் ஒருங்கிணைந்த சேவையில் முதன் முதலாக யாழ் மண்ணில் உதயமாகின்றது இலங்கையின் No.1 கணனி நிறுவனமான

ESOFT
The Leader in Professional ICT Education

Esoft Computer Studies (Pvt) Ltd
The Leader in Professional IT Education

இப்போது உங்கள் மண்ணில்...

இலங்கை அரசு, சர்வதேசம் ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள், கணனிக்கற்கை நெறிகள், சிறுவர்களுக்கான கணனிப்பயிற்சிகள் என்பவற்றை வழங்கும் இலங்கையின் ISO 9001:2008 சான்றிதல் பெற்ற No.1 நிறுவனம்.

No. 114, Navalar Road, Jaffna. T.P- 021 222 4142 Web: www.esoft.lk

(C-2903)

# அடுத்த மாதம் முற்பகுதியில் அமைச்சர்கள் குழு யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் பல்வேறு துறைசார்ந்த அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராய அடுத்தமாத முற்பகுதியில் முக்கிய அமைச்சர்கள் பலர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.இது தொடர்பில் அவர்மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக சுகாதார சேவைகள் (14ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விடுதலைப் புலிகள் அமைப்பு புத்துயிர் பெறச் சாத்தியமில்லை

## அமைச்சர் ரோகித தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் இலங்கையில் புத்துயிர் பெறுவதற்கான சாத்தியங்கள் ஏதும் இல்லை என்று அரசு தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவராக செல்வ ராஜா பத்மநாதன் நியமிக்கப்பட்டமை தொடர் பில் கருத்துத் தெரிவித்த போதே அரசு இவ்வாறு கூறியுள்ளது.

விடுதலைப் புலிகளின் வலையமைப்பு கொண்டுள்ள பணத்தையும் சொத்துக்களை யும் கையகப்படுத்திக் கொள்ளும் நோக்குட னேயே யாரோ சிலர் புலிகளின் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார் என வெளிவிவகாரத் துறை அமைச்சர் ரோகித போகொல்லாகம செய்தி முகவர் நிறுவனம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்தார்.

பத்மநாதனைக் கைது செய்யுமாறு ஏற்கனவே உலக நாடுகளுக்கு வேண்டு கோள் விடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் நாட்டுக்குள்ளேயோ வெளிநாடுகளிலேயோ புத்துயிர் பெறுவதற் கான வாய்ப்புக்கள் ஏதும் இல்லை என்பதில் அரசு உறுதியாக உள்ளது.

இதேவேளையில் அரசின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச் சருமான ஹெகலிய ரம்புக்வெல, விடுதலைப் புலிகளின் தலைவராக பத்மநாதன் நியமிக் கப்பட்டிருப்பது கவனத்தில் எடுத்துக் கொள்ளப் பட வேண்டிய ஒரு விடயமே இல்லை என்று தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளிடம் உள்ள பெருமளவு



நிதியை கையகப்படுத்திக் கொள்ளும் நோக் குடன் புலிகளின் தலைமையை செல்வராஜா பத்மநாதன் பொறுப்பேற்பார் என்பது எதிர் பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால் விடுதலைப் புலிகள் நாட்டில் இருந்து துடைத்தழிக்கப் பட்டநிலையில் இது தொடர்பாக அரசு கவலைப் படாது என்றும் அவர் மேலும் கூறினார். (ச-5)

## யாழ்ப்பாண ரயில் சேவை விஸ்தரிப்பு பணி துரிதம்

(கொழும்பு)

தாண்டிக்குளம் வரையில் விஸ்தரிக்கப் பட்ட வடக்கிற்கான ரயில் சேவையை ஓமந்தை வரையில் விஸ்தரிப்பதற்காக ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்கள வர்த்தக அத்தியட்சகர் விஜயசமரசிங்க தெரிவித்தார். தண்டவாளங் கள் ,ரயில் நிலையம் மற்றும் ரயில் சமிக்ஞை விளக்குகள் என்பன சீரமைக்கப்பட்டவுடன் இன்னும் மூன்று மாதத்தில் இந்தசேவை ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறியுள் ளார்.

புலிகளுடனான போர் நடவடிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து வடக்கிற்கான ரயில் போக்குவரத்துச் சேவை கள் தாண்டிக்குளம் வரை விஸ்தரிக்கப் பட்டன.அச்சேவையை ஓமந்தைவரை விஸ் தரிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

வடக்கின் நண்பன் வேலைத்திட்டத்தின் ஊடாக எதிர்வரும் 2010 ஆம் ஆண்டுக்கு முன் னர் வடக்கிற்கான ரயில் போக்குவரத்து சேவைகள் முழுமையாக விஸ்தரிக்கப்படவுள் ளன.இதற்காக 14 பில்லியன் ரூபாய் செலவா குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ச-5)

## ஐ.ரி.என். ஏற்பாட்டில் மாபெரும் இன்னிசை இரவு

சுயாதீன தொலைக்காட்சியின் (ஐ.ரி.என்) ஏற்பாட்டில் தென்னிந்தியக் கலைஞர்களு டன் கொழும்பு அப்சராஸ் இசைக் குழுவினர் வழங்கும் மாபெரும் இன்னிசை இரவு ஓகஸ்ட் முதலாம் திகதி யாழ் மத்தியகல்லூரி மைதா னத்தில் இடம் பெறவுள்ளது.

இரவு 8.00 மணிக்கு ஆரம்பமாகும் இந் நிகழ்வில் தென்னிந்திய பாடகர்களான ஆர். ரனினா ரெட்டி, ஆர்.நவீன் ரீட்டா (சுயிந்திர தியாகராஜன்), சேகர், பி.பிர்முகமட்டுடன் இணைந்து கொழும்பு அப்சராஸ் இசைக்குழு வின் எம்.மோகன் ராஜ், செந்தூரன், ஆர் . ஆனந்தராஜா, கதன் சிறிமேவன், ஹரி தாஸ் கண்ணா, எம்.எவ்.எம். இக்பால் ,எம்.ஜே. எம். ஹுசைன், நவ்லர், எஸ். செல்லத்துரை, என்.ரகுநாதன், லில்லி மயில்வாகனம், பிரசாந்தினி, தம்பிராஜா, எம். குலேந்திரன் ,பி. சித்தாராமன், ரி.தபேசன், எம்.குலேந்திரன், சம்பாகல்காரி, கே.சுஜீவா ஆகியோர் கலந்து இசை இரவை வழங்கவுள்ளனர். (ச-5)

Dialog CDMA தொலைபேசி விற்பனைக்குண்டு

Dialog CDMA தொலை பேசி விற்பனைக்குண்டு. பெறவிரும்புவோர் அடையாள அட் டையும் குடும்ப பதிவு அட்டையும் கொண்டு வரவும்.

(C-2906)

தம்பையா தவராசா
மூளாய் பிள்ளையார் கோவிலடி

## பேருவளையில் குழு மோதல் மூவர் பலி; பள்ளிவாசல் தீ வைப்பு

பேருவளையில் இரண்டு முஸ்லிம் குழுக் களிடையே நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டதுடன் ஒன்பது பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர். முஸ்லிம் பள்ளி வாசல் ஒன்றும் இச் சம்பவத்தில் தீ வைத்து எரிக்கப்பட்டது.

பேருவளையில் குறிப்பிட்ட இரு முஸ்லிம் மதக் குழுக்களிடையேயும் நீண்ட காலமாக பகைமை நிலவி வந்துள்ளது. இந்தப் பகைமை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மோதலாக வெடித்து பெரும் பதற்ற நிலையை ஏற்படுத்தியது.

குறிப்பிட்ட ஒரு மதப்பிரிவினருக்குச் சொந்தமான பள்ளிவாசல் மற்றைய மதப்பிரிவி னரால் எரிக்கப்பட்டது. இதன் போது இடம் பெற்ற மோதலில் 3 பேர் கொல்லப்பட்டனர். ஒன்பது பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பாக தகவல் கிடைத்ததும் பொலிஸார் அமைதியை நிலைநாட்டினர். தீயணைப்பு படையினர் தீயை அணைத் தனர். இச் சம்பவத்தையடுத்து பேருவளைப் பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் காணப்படுவ தால் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர். (ச-5)



# நாவலர் மணிமண்டபத்தில் நல்லூர் மஹோற்சவ கால ஆன்மீக நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடத்தும் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் நாளை 27 ஆம் திகதி திங்கட்கிழமை 3 மணி தொடக்கம் 6 மணிவரை நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதலாம் நாள் நிகழ்வில் *பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்* எனும் தலைப்பில் சைவப் புலவர் நித்திய தசிதரனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (ஓ)

## புதிய நிர்வாகிகள்

(வடமராட்சி)

மேலைப் புலோலி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக சோ. கங்காதரன், உப தலைவராக ஆ. வேலும் மயிலும், பொருளாளராக செ. விக்னேஸ்வரன், செயலாளராக சு. விக்னேஸ்வரன் மற்றும் ஐந்து நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஓ-10)

## அகில இலங்கைச் சைவ நெறிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் பரீட்சைப் பகுதியினரால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் அகில இலங்கைச் சைவ நெறிப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் 7 ஆம் திகதியும் இம்முறை நடத்த உள்ள தரம் 09, 10, 11 வகுப்புகளுக்கான தமிழ் மொழிப் பரீட்சை நவம்பர் 6 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதாகவும், அதிபர்கள், ஆசிரியர்கள் விண்ணப்பப் படிவம் தேவைப்படின் பரீட்சைப் பகுதியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் சபையின் தேர்வுச் செயலர் இரா. செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (ஓ)

## நல்லூர் முருகன் உற்சவகால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி வரையான 27 நாட்கள் தினமும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நல்லூர் கந்தசுவாமி ஆலய கொடியேற்றதினமான நாளை திங்கட்கிழமை மாலை 5.45 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகவுள்ள நிகழ்வில் ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் வழங்கவுள்ளார்.

அத்துடன் மாலை 6 மணிக்கு கே. ஆர். சுந்தரமூர்த்தி, எஸ். தேவதாஸ், எஸ். ராமதாஸ், ஆர். பாஸ்கரன் ஆகியோர் இணைந்து வழங்கும் நாதஸ்வரக் கச்சேரியும் இடம் பெறவுள்ளது. (ஓ-4)

## நல்லூர் கந்தன் ஆலய மஹோற்சவ கொடிச்சீலை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு செங்குந்த மக்களால் தொன்று தொட்டு வழங்கி வரும் கொடிச்சீலை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள முருகன் ஆலயத்திலிருந்து அழகிய சித்திரத் தேரில் வழமை போல நல்லூர் ஆலயத்திற்கு எடுத்து வரப்படும் என அறிவிக்கப்படுகின்றது. (ஓ)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | 160 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | -- | 140 | -- |
| கரட் | 100 | 120 | 80 |
| பூசணி | 50 | 60 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 | 50 |
| பயிற்றங்காய் | 50 | 60 | 50 |
| லீக்ஸ் | 60 | 80 | 100 |
| பீற்றூட் | 45 | 60 | 60 |
| கறிமிளகாய் | 40 | 50 | 60 |
| முருங்கைக்காய் | 140 | 160 | 200 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 40 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 20-25 | 30-35 | 30 |

## வாரம் ஒரு தகவல்

### உழைத்து வாழ வேண்டும்

"அண்ணே... நீங்க எப்படி இந்த ஜெயிலுக்கு வந்தீங்க?"

"அவசரமாக கொஞ்சம் பணம் தேவைப்பட்டது. ஒரு சின்ன திருட்டில் மாட்டிக் கெண்டேன்."

"திருடுவது ரொம்பத் தப்பு அண்ணே"

"நீ... எனக்குப் புத்தி சொல்கிறாயா?"

"நான் சொல்லவில்லை. பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்."

"என்ன சொல்லியிருக்கிறார்கள்?"

"எப்படி வாழ வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்."

"எப்படி வாழ வேண்டுமாம்?"

"மூட்டைப் பூச்சியைப் போல மற்றவர்களை துன்புறுத்தியும் எலியைப் பேல திருடி வயிறு வளர்த்தும் கறையான்களைப் போல பிறர் பொருளை நாசப்படுத்தியும் வாழக் கூடாதாம்.'

"பின்னே... எப்படித்தான் வாழ வேண்டுமாம்?"

"தேனீ போல... எறும்பு மாதிரி உழைத்து சாப்பிடவேண்டுமாம். அதுதான் உண்மையான வாழ்க்கையாம்."

"எல்லாம் என்னுடைய நேரம் தான்."

"என்னண்ணே சொல்றீங்க?"

"பின்னே என்ன? என்னை மாதிரியே நீயும் ஒரு கைதி. நீ வந்து எனக்குப் புத்தி சொல்லும் அளவுக்கு நிலைமை ஆகிவிட்டது பார்த்தாயா?"

"நான் உங்களை மாதிரி திருடிவிட்டு ஜெயிலுக்கு வந்தவன் இல்லண்ணே"

"பின்னே... எப்படி வந்தாய்?."

"சொந்தக்காலில் நிற்க வேண்டும். அதுதான் கௌரவம் என்று நினைத்து சுயதொழில் தொடங்கினேன். அதுதான் தப்பாகி விட்டது?"

"என்ன தொழில் அது?."

"கள்ளச்சாராயம் காய்ச்சினேன்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

*26.07.2009*
*(ஆடி 10, ஞாயிற்றுக்கிழமை)*
*பஞ்சமி முன்னிரவு 10.58 மணிவரை*
*உத்தரம் முன்னிரவு 11.45 மணிவரை*
*இராகுகாலம் 4.32-6.02 மணிவரை*
*சுபநேரம் 9.02-10.32 மணிவரை*
*கருட பஞ்சமி*

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி, போசன சுகம், தேகநலன். |
| இடபம் | குடும்பக் கவலை, ரோக பயம், போசன சுகம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | தாய்வழி உறவு, கலந்துரையாடல், சுபசெலவு, ஆரோக்கியக்குறைவு. |
| கடகம் | உறவினர் வருகை, முயற்சி கைகூடும், பிரயாண நன்மை, வாக்கு மேன்மை. |
| சிங்கம் | விவாதம், தொழில் சிந்தை, எதிர்பாராத நன்மை, முயற்சி தாமதம். |
| கன்னி | தொழில் விருத்தி, கற்பனை மிகுதி, நல்ல முயற்சி, பெரியோர் உதவி. |
| துலாம் | தேவையற்ற மனஸ்தாபம், பயணம், நிலைமாற்றம், வீண் அலைச்சல். |
| விருச்சிகம் | குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும், விருந்தினர் வருகை, கீர்த்தி. |
| தனுசு | தொழில் சிந்தை, கல்வியில் ஆர்வம், ஆரோக்கிய நிலை, உற்சாக நிலை. |
| மகரம் | கட்டுப்படுதல், பித்தரோகம், முயற்சி தாமதம், வாக்கு மேன்மை. |
| கும்பம் | அமைதிக்குறைவு, வேலைச்சுமை, காரிய தாமதம், போசன சுகம். |
| மீனம் | தெய்வசிந்தை, எடுத்த காரியம் கைகூடும், உறவினர் சந்திப்பு, தனவருவாய். |

வளவன்

## -: விழுதுகளின் கேள்வி :-

விழுதொன்று வேரை விமர்சனம் செய்கிறது
மனுநீதிச் சோழனே பசுவுக்காய்
பாலகனை பலி கொடுத்த வேந்தனே
சாவுக்கு சாவுதான் தீர்வு என
தீர்ப்பெழுதி சாவுகளை ஆரம்பித்து வைத்தது
நீ - தானே? முல்லைக்கு தேர்கொடுத்த
பாரியே தேர் கொடுத்த நீ
அதற்கு நீர் கொடுத்தாயா?
இராமபிரானே உன் ஒருவனின்
மனைவியை மீட்பதற்கு எத்தனை ஆயிரம்
வானரக் கணவனை பலி கொடுத்தாய்
இதுமட்டும் பாவமில்லையா?
கண்ணகியே உன்
கற்பின் கனதியை காட்டுவதற்கு
மதுரை மன்னனைக் கொழுத்தியிருக்கலாம்
இல்லை முன்னமே
மாதவியை எரித்திருக்கலாம்
ஏன் மதுரை மாநகரையும் மக்களையும்
எரித்து மண்ணாக்கினாய்?
வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடிய வள்ளலாரின் மிச்சங்களில் சிலரும்
உங்களைப் போன்றோரின்
எச்சங்களாய் பலரும்
இன்னும் இருக்கிறார்கள்.

த. தர்பாகரன்
மானிப்பாய்.

## தமிழன்னை துவண்டனள் தவித்து

சந்தச் சுவை நனி சொட்டச் சொட்டிச்
சந்தம் கவி செய்த சாகித்தியன் - எந்தம்
அமிழ்தன், முருகையன் அமரத்துவம் அடைந்தார்
தமிழன்னை துவண்டனள் தவித்து.

டானியல் - தேவமதுரம்

# கலையரசு சொர்ணலிங்கத்தின் 27ஆவது நினைவு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மறுமலர்ச்சி மன்றத்தினால் நடத்தப்படும் கலையரசு சொர்ணலிங்கத்தின் 27ஆவது நினைவு தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு லோட்டன் வீதி, மானிப்பாய் என்னும் முகவரியில் அமைந் துள்ள கலையரசு சொர்ணலிங்கத்தின் புத்தி ரன் சொ. பாலகிருஷ்ணன் இல்லத்தில் மறு மலர்ச்சி மன்றத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நீதி பதி திருமதி ஜோய் மகிழ் மகாதேவன் கலந்து கொள்ளவுள்ளதுடன் நிகழ்வில் கலையரசு சொர்ணலிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு குழந்தை சண்முகலிங்கம் மலர் மாலை அணிவித்து கௌரவிக்கவுள்ளார்.

தொடர்ந்து நினைவுப் பேருரையை கலை யரசு சொர்ணலிங்கத்தின் அரங்க நுட்பங்கள் என்னும் விடயம் பற்றி யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் க.ரதிதரன் வழங்கவுள்ளார்.

அத்துடன் விவேகானந்தா வித்தியா சாலை மாணவர்களின் பேச்சு அரங்க நிகழ்வு என்பனவும் கலையரசு சொர்ணலிங்கத்தின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கட்டுரைப் போட் டிக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம் பெற வுள்ளது. (ஓ-4)

## தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சர் யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை

(யாழ்ப்பாணம்)

வாழ்க்கைத் தொழில் மற்றும் தொழில் நுட்பப் பயிற்சி அமைச்சர் பியசேன கமகே நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு வருகை தர வுள்ளார்.

இதன்போது வடக்கில் வசந்தம் செயர் திட்டத்தின் கீழ் பயிற்சிபெறும் மாணவர்கள் அன்றைய தினம் வேலைவாய்ப்பு பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை நேரடி யாக சமர்ப்பிக்கலாமெனவும்

இப்பயிற்சி நெறியினை மேற்கொள்கின்ற மாணவர்கள் தமது பெற்றோர்கள், உறவினர் கள், யுத்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தங்கி வாழ்ந்தால் அவர்களின் தேவைகள், குறைபாடுகள், அவர்களை முகாம்களிலிருந்து வெளிக்கொணரல் போன்ற ஆலோசனைகளை எழுத்து மூலம் தெரிவித்துக்கொள்ள முடியும் எனவும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் பணிப்பாளரும் அதிபருமான ந.யோகராஜன் தெரிவித்துள் ளார். (ஓ-30)

# அலங்கார உற்சவம்

(கல்வயல்)

கோப்பாய் அருள்மிகு பாலனை கண் ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பறமும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை இரதோற்சவமும் மறுநாள் புதன்கிழமை காலை தீர்த்தோற்சவ மும் இடம்பெறவுள்ளது. (ஓ-4-31)

☼ ☼ ☼

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்ட வர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகி றது.

இவ் உற்சவத்தில் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி புதன்கிழமை ஆடிவேல் பவனியும் மறு நாள் வியாழக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (ஓ-4-29)

# கைப்பணிப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச கிராம அபிவிருத்திச் சங் கங்களின் சமாசம் நடத்தும் கைப்பணிப் பொருட் களின் கண்காட்சியும் விற்பனையும் இடம் பெறவுள்ளது.

இதற்கான விற்பனை நிலையத் திறப்பு விழா நாளை நல்லூர் சிவன் கோயிலுக்கு அருகில் சாமசத்தலைவர் கா. தில்லையம் பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந் தனன் கலந்துசிறப்பிப்பதுடன் சிறப்பு விருந் தினர்களாக யாழ். மாநகர சபை ஆணை யாளர் மு.செ. சரவணபவ, யாழ். மாவட்ட செயலகம் மாவட்ட கிராம அபிவிருத்தி உத் தியோகத்தர் திருமதி அ.ஜெயராஜன் மற்றும் கௌரவ விருந்தினராக நல்லூர் தெற்கு கிராம அலுவலர் திருமதி இராகினி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

# புதிய குரு நியமனம்

(கல்வயல்)

அமெரிக்கன் இலங்கை மிசன் சாவகச் சேரி திருச்சபையின் யாழ். பிராந்திய செயற் குழுவினால் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வரும் வகையில் புதிய குருவாக வண. டனியல் ரஞ்சித் நிய மிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் தெல்லிப்பளை திருச்சபை யில் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் சாவகச்சேரியில் மிசன் இல்லம் (குருமனை) ஒன்று விரைவில் புதிதாக திறந்து வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது. (ஓ-4-31)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்க ளுக்கான கலந்துரையாடல் நாளை திங்கட் கிழமை நண்பகல் 1 மணிக்கு யாழ். பரியாக்கோ முன்பள்ளியில் நடைபெறவுள்ளது.

அனைத்து நல்லூர் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது சமுகம் தரும் படி ஆரம்பப் பிள்ளைப்பருவ பராமரிப்பு மேற் பார்வையாளர் திருமதி மாலதி விவேகானந் தன் கேட்டுள்ளார். (ஓ)


## ஸ்ரீ மத் முத்துகுமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 24ஆவது குருபூசை தினம்



காலம் :- 28.07.2009 செவ்வாய்க்கிழமை

இடம் :- சந்நிதியான் ஆச்சிரமம்

விசேட நிகழ்வு:- ''இசைச் சொற்பொழிவு''

வழங்குபவர் :- திரு.க. ஆனந்தராசா (அன்னைதாஸன்) அவர்கள்

வழமைபோல் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம் பெறும் விசேடபூசை அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் குருபூசை நிகழ்வுகள் இடம்பெறும்.

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தினர்
தொண்டைமானாறு. (சி/2909)


# கலாசார நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யு.என்.டி.பி நிறுவனத்தின் நிதி அனு சரணையுடன் சொண்ட் நிறுவனத்தின் ஏற் பாட்டில் நடைபெறவுள்ள கிராம மக்களுக் கான கலாசார நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை நண்பகல் ஒரு மணி தொடக்கம் மாலை 6 மணிவரை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சாந்தையர் கிராமத்தில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக நிறு வனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் நிசாந்தன் கலந்து சிறப்பிப்பதுடன் கிராம மக்களின் கலாசாரத்தை மேம்படுத்தும் நோக் குடன் நாடகங்கள், சிறுவர் ஆக்க வெளிப் பாடு கள் என்பன இடம்பெறவுள்ளதாக நிறுவனத் தின் திட்ட உத்தியோகத்தர்கள் தெரிவித்துள் ளனர். (ஓ)

# கௌரவிப்பு நிகழ்வு

(வடமராட்சி)

வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் லயன் உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை இ.போ. ச. சாலை முன்பாக உள்ள பழைய பிரதேச செயலக கட்டத்தில் வடமராட்சி லயன்ஸ்கழகத் தலைவர் லயன் எஸ். தவச்செல்வம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் லயன் எஸ். ரவீந்திரவும் லயன் லேடி கிருஷாந்தியும் கலந்து சிறப்பிக்கவுள்ளதுடன் கௌரவ விருந் தினர்களாக முன்னாள் மாவட்ட இணைப்பாளர் லயன் கே. தணிகாசலம் மற்றும் லயன் லேடி பரமேஸ்வரியும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4, 10)

# பழைய மாணவர் சங்க புதிய நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி யின் இவ்வாண்டுக்கான பழைய மாணவர் சங்க புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப் பட்டுள்ளது.

இதில் தலைவராக ரோனி .பி.கணேசன் உப தலைவர்களாக டாக்டர் எஸ். சதாசிவம் , ஆர். முத்துநாணந்தன், செல்வி எஸ்.செல் லத்துரை , சி. மகாலிங்கம் , செயலாளர் ஆர்.ரமேஸ் , பொருளாளர் எ.சி. பிறான்சிஸ் ஆகியோரும் ஒல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக முகாமையாளராக ஆர் .குகன் ஆகி யோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் நிர்வாக உறுப்பினர்களாக வண. எ.ஜெயக்குமாரன் , எஸ்.ஜங்கரன் ,எஸ். சிவ ஜன், கே.முருகதாஸ், ரி.வாமதேவன், கே.என்.ராஜ காந்தன் , ஜே.பி. மில்ஸ் , கே. செல்வராஜா கே. ராதாகிருஸ்ணன், ஆர். பொன்னுராஜா ஆர். இராஜேஸ்வரன், வி.கோபிகிருஸ்ணா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-27)


# ஆலோசனை சபை கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் நகர அபி விருத்தி ஆலோசனைச் சபைக் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல அங்கத்தவர்களை யும் தவறாது கலந்துகொண்டு தகுந்த ஆலோ சனைகளை வழங்கி உதவுமாறு சபைச் செயலாளர் திருமதி.கு.ஆறுமுகம் அறிவித் துள்ளார். (ஓ-4-29)





உரும்பிராய் மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய மகேஸ்வர பூசைக்காக திரட்டப்பட்ட நிதி யாழ். தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பில் இடப்பட்டு அதற்கான வைப்புச் சான்றிதழை யாழ். தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் ந.யோகராஜன், திருமதி மாலதி யோகராஜன் தம்பதிகளிடம் யாழ். தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் அ.தெய்வேந்திரன் கையளிப்பதையும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் அவ்வைப்புச் சான்றிதழினை ஆலய பரிபாலன சபையினரிடம் ஒப்படைப்பதனையும் படங்களில் காணலாம்.




# அச்சமுண்டு அச்சமுண்டு

திரை விமர்சனம்

இந்தியாவில் உள்ள குழந்தைகளுக்கு பாலியல் ரீதியான தொல்லைகள் அதிகம் நடைபெறுகின்றன என்பதை சொல்ல வந்திருக்கும் அமெரிக்க வாழ் இந்தியர்களின் தமிழ்ப்படம்!

கதைப்படி, அமெரிக்கா- நியூஜெர்சி புறநகர்ப் பகுதியில் வசிக்கும் தமிழ்க்குடும்பம் பிரசன்னா- சினேகாவினுடையது.தங்களது செல்லமகள் அக்ஷயாதினேஷுடன் வசிக்கும் அவர்கள் வீட்டிற்குள் பெயிண்டர் ரூபத்தில் அடியெடுத்து வைக்கிறான் வில்லன் ஜான்ஷே!

அமெரிக்கன்,இந்தியன், தமிழன் என்ற பாகுபாடில்லாமல் பல குழந்தைகளை பாலியல் பலாத்காரம் செய்து கொள்ளும் ஜான்ஷே, பிரசன்னாவின் பெண் குழந்தை அக்ஷயாவையும் அடையத் துடிக்கிறான். அவனது ஆசை வென்றதா? அல்லது அவனை பிரசன்னா கொன்றாரா? என்பதுதான் மீதிக்கதை!



மேக்கப்பும்,மீசையும் இல்லாமல் பிரசன்னா அமெரிக்கா வாழ் தமிழராகவே அசத்தியிருக்கிறார். குழந்தை மீதான பாசத்திலும் சரி, மனைவி சினேகா மீதான காதலிலும் சரி நடிப்பில் வெளுத்து வாங்கியிருக்கிறார்.சினேகாவும் பிரமாதம்! கணவன் பிரசன்னாவுடன் காதல் புரியும் காட்சி தவிர பிற காட்சிகள் அனைத்திலும் அக்ஷயாதினேஷின் அழகான அம்மாவாக அமைதியாக நடித்து சபாஷ் வாங்கி விடுகிறார்.பிரசன்னா -சினேகா இருவரையும் தூக்கிச் சாப்பிட்டு விடுகிறார் அமெரிக்க வில்லன் ஜான்ஷே என்றால் மிகையல்ல. குழந்தை நட்சத்திரம் அக்ஷயாதினேஷும் பிற அமெரிக்க வாழ் இந்தியர்களும் கூட பேஷ் பேஷ் சொல்ல வைத்து விடுகின்றனர்.கிரிஸ் ப்ரெய்சின் ''ரெட் ஒன்''கமரா ஒளிப்பதிவும் , கார்த்திக் ராஜாவின் இசையும் படத்திற்குப் பலம் என்றாலும் முழுக்க முழுக்க அமெரிக்கப் பின்னணி சற்றே பலவீனம்.

மொத்தத்தில் "அச்சமுண்டு அச்சமுண்டு" உலகத்தில் மனிதர்கள் இப்படியும் உண்டு! எனக் குழந்தை பாலியல் கொடூரர்களை அடையாளப்படுத்தி அறைகூவல் விடுத்துள்ளது!

# சிம்புவுடன் ஜோடி சேருவாரா ஷாம்லி?



கதாநாயகிக்காக அங்கே,இங்கே தேடிய சிம்பு கடைசியாக பரிசீலித்திருப்பது நடிகை ஷாம்லியை ! நடிகை ஷாலினியின் தங்கையும்,குழந்தை நட்சத்திரமாக தமிழ் சினிமாக்களில் வந்து பெயரெடுத்தவருமான ஷாம்லி தற்போது தெலுங்கில் ஓய் என்ற படத்தில் நாயகியாக நடித்துள்ளார். ஆந்திராவில் ஓய் படம் ஓசையில்லாமல் வெற்றி பெறவே...அம்மணிக்கு வாய்ப்புகள் பல வாயிற் கதவைத் தட்டுகின்றன.

இருப்பினும் அடுத்த படத்தில் ஒப்பந்தம் ஆகாமல் மௌனம் காத்துவரும் ஷாம்லிக்கு தூது விட்டிருக்கிறார் சிம்பு.

போடா போடி படத்தில் தனக்கு ஜோடியாக நடிக்குமாறு ஷாம்லியிடம் கால்ஷீட் கேட்டிருக்கிறார் சிம்பு.

ஆனால் ஷாம்லியோ.. சிம்புவின் அழைப்புக்கு பதில் எதுவும் தெரிவிக்கவில்லையாம். இருப்பினும் ஷாம்லியை எப்படியாவது தனது ஜோடியாக்கி விடவேண்டும் என்று முயற்சி எடுத்து வருகிறாராம் சிம்பு.

ஏற்கனவே போடா போடி படத்தில் நடிக்க நடிகர் சரத்குமாரின் மகள் வரலட்சுமி ஒப்பந்தம் செய்யப்பட்டு, பின்னர் அவர் விலகியது குறிப்பிடத்தக்கது.

# சமீராவுக்கு உற்சாகம் கொடுக்கும் கௌதம்மேனன்



இந்திப் படநாயகி சமீரா ரெட்டியை, அசின் இடத்தை நிரப்பவே, தமிழுக்கு கொண்டு வந்தார் இயக்குநர் கௌதம் மேனன். ஆனால், சமீரா ரெட்டியின் துரதிர்ஷ்டம்,வேறு படம் அவருக்குக் கிடைக்கவில்லை.

இருப்பினும், "என் அடுத்த படங்களில் உன்னை நடிக்க வைத்து, ராசியான நடிகை ஆக்குவேன்" என்று சமீரா ரெட்டிக்கு உற்சாகம் கொடுத்து வருகிறார் கௌதம் மேனன்.

# குடும்பப்பாங்கான வேடங்களில் நடிக்க ஆசை: லஷ்மிராய்



கவர்ச்சியான வேடங்களில் நடித்து நடித்து எனக்கே சலிப்பாகி விட்டது. குடும்பப் பாங்கான வேடங்களில் நடிக்க ஆர்வமாக இருக்கிறேன் என்கிறார் லஷ்மிராய்.

கற்க கசடற மூலம் நடிக்க வந்த லஷ்மிராய், நடிப்பைக் கற்றாரோ இல்லையோ, கிளாமரை கசடறக் கற்றுக் கலக்கிக் கொண்டிருக்கிறார்.

லஷ்மிராய் நடிக்கும் படம் என்றால் கண்டிப் பாக கிளாமர் இருந்தாக வேண்டும் என்பது எழுதப் படாத சட்டமாகிவிட்டது.

ஆனால் லஷ்மியோ, இப்படியெல்லாம் நடித்து நடித்து எனக்கே சலிப்பாக உள்ளது. குடும்பப் பெண்ணாக நடிக்க ஆர்வமாக இருக்கிறேன் என்கிறார்.

# ஹொலிவுட் தரத்தில் யோகி அமீர் பெருமிதம்

சுப்பிரமணியசிவா இயக்கத்தில் உருவாகியிருக்கும் யோகி படம் ஹொலிவுட் தரத்தில் இருப்பதாக இயக்குநரும் நடிகருமான அமீர் பெருமிதம் பொங்கக் கூறியிருக்கிறார். இப்படம் குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில் ,



சென்னையில் உள்ள குடிசைப் பகுதிதான் யோகி படத்தின் கதைக்களம். அங்கு வசிக்கும் யோகேஷ்வரன் (யோகி) என்னும் இளைஞனின் உணர் வுகள் தான் கதை. சென்னைவாசிகள்பற்றி இதற்கு முன் சில படங்கள் வந்திருந்தாலும் யோகியில் பார்க்கப் போகும் களம் புதுசாக இருக்கும். எட்டுக்கு எட்டு அறையில் அவர்கள் நடத்தும்வாழ்க்கையே தனிப் படமாக எடுக்கும் அளவுக்கு சுவாரஸ்யம் இருக்கிறது.

பசி எடுக்குதுன்னு தெரிஞ்சா சூழ்நிலை, சுற்றியிருக்கும் மனிதர்கள் என எதையும் யோசிக்காமல் அடித்து ,பிடுங்கி சாப்பிடும் கேரக்டர்தான் யோகி.

# வாமனன்

திரை விமர்சனம்



சினிமா நடிகராக வேண்டுமென்ற ஆசையில் சென்னைக்கு வரும் கிராமத்து இளைஞன் ஜெய், செய்யாத ஒரு கொலைக்காவும், தன்னிடம் இல்லாத ஒரு கொலை ஆதார டேப்பிற்காகவும் நகரத்து "அரசியல்வாதிகளிடமும் அதிகார வர்க்கத்திடமும் மாட்டிக்கொண்டு படும்பாடுதான் "வாமனன்"

கதைப்படி,நடிகர் ஆசையில் சென்னை வரும் ஹீரோ ஜெய் தன் ஊர் நண்பன் காமெடி சந்தானம் அறையில் தங்கி வாய்ப்புத் தேடுகிறார். யதேச்சையாக ஒருநாள் நாயகி ப்ரியாவை ரயில் நிலையத்தில் சந்திக்க அது முதல் அவர் மீது காதல் கொள்கிறார்.

இந்நிலையில் நடிப்பிற்காக ரகுமானைப் பின்பற்றி அவரது மேனரிசங்களைக் கற்றுக்கொள்ள முற்பட அவருடன் நெருக்கமான நட்பு ஏற்படுகிறது ஜெய்க்கு. அதுமுதல் பூட்டியிருக்கும் வீட்டிற்குள் போய் பொழுது போக்கி திரும்பும் வழக்கமுடைய ரகுமான்,ஜெய்யையும் தன்னுடன் கூட்டிப் போக ஆரம்பிக்கிறார். அதேபோல் ஒருநாள் நடிகை லட்சுமிராய் வீட்டிற்கு ஜெய்யை அழைத்துப் போகிறார் ரகுமான். திருடும் நோக்கத்துடன் லட்சுமிராய் வீட்டிற்குப் போகாத ஜெய்யின் சட்டைப் பையில் லட்சுமியின் கழுத்துச் சங்கிலி ஒன்று வீடு திரும்பி யதும் தட்டுப்படுகிறது. அதைத் திருப்பிக் கொடுத்தால் லட்சுமிராயுடன் நட்பு ஏற்படும்.அதன் மூலம் பெரிய நடிகர் ஆகிவிடலாம் என திட்டமிடும் ஜெய் ,அவ்வாறே செய்கிறார்.அவர் திட்டமிட்டபடியே நட்பும் ஏற்படுகிறது.

ஆனால் சில நாட்களிலேயே லட்சுமிராய் கொலை செய்யப்படுகிறார். அந்தக் கொலைப் பழி ஜெய் மீது தூக்கிப் போட்டது யார்? காரணம் என்ன? ஜெய்யின் காதல் என்னவாயிற்று...? என இன்னும் பல கேள்விகளுக்கு ஜெய் வாமன அவதாரம் எடுத்து வில்லன்களை பந்தாடி பரபரப்பாக பதில் சொல்வதே மீதிக் கதை!

ஹீரோவாக ஒரு வட்டத்திற்குள் நடிக்காமல் கதைக்கேற்றபடி நடித்து சபாஷ் வாங்கிவிடுகிறார் ஜெய். அதுவும் நண்பன் சந்தானம் காசில் அவரை ஊரில் நடந்த ஒரு நிகழ்ச்சியை சொல்லி மிரட்டி மிரட்டியே தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் காட்சிகளில் செம காமெடி செய்திருக்கிறார்.

நாயகி ப்ரியா,காமெடி சந்தானம், வில்லன்கள் ரகுமான்,சம்பத், தலைவாசல் விஜய் உள்ளிட்டோருடன் ஊர்வசி ,ரோகினி, சண்முக ராஜேஸ்வரன், காவல் அதிகாரியாக வரும் இப்பட தயாரிப்பாளர் ஆர்.ரவீந்திரன் உள்ளிட்ட அனைவரும் பாத்திரத்திற்கேற்ற தேர்வு!

ஐ.அஹமத்தின் எக்ஸ்பிரஸ் கதை, திரைக்கதை, இயக்கத்திற்கு வலு சேர்த்திருக்கின்றன.

"வாமனன்": "வசீகரன்!"

# மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் சமூகம் எவ்வாறான பங்களிப்பை மேற்கொள்ள முடியும்

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கல்வி வளர்ச்சி என்பது குறிப்பிட்ட சில வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் பெயர் சொல்லக் கூடியளவுக்குச் சிறப்பாகக் காணப்பட்டது. ஆனால் தற்போதுள்ள நிலை முற்றிலும் மாறியுள்ளது.

இவ்வாறான ஒரு நிலை உருவாவதற்கு தனிப்பட்ட முறையில் கல்விச் சமூகத்தையோ அல்லது மாணவர்களையோ குறைகூறி விட முடியாது. இவ்வாறான ஒருநிலை ஏற்படுவதற்கு சமூகமும் காரணமாக அமைகிறது. இந்நிலை தொடர்ந்தால் கல்வி நிலையில் யாழ். மாவட்டம் பின்நோக்கிப் பயணிக்கும் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இவ்வாறான நிலை ஏன் உருவாகியது என்பதை சமூகப் பொறுப்புள்ள அனைவரும் சிந்திக்க வேண்டும்.

மாறிவரும் கலாசாரம், வியாபார நோக்கான கல்வி, அதீத தொழில்நுட்ப வளர்ச்சியால் மாணவர்கள் அதில் அதிக ஆர்வம் செலுத்துகின்றமை மற்றும் பெற்றோர்களின் கௌரவப் போட்டி, கல்விப் போட்டி போன்ற காரணங்களால் யாழ்.மாவட்ட கல்வி நிலை பின்நோக்கிச் செல்கிறது. ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் இருந்து பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிலிருந்து வெளிவரும் வரையில் கல்விப் போட்டி என்பது மாணவர்களைப் பாதிக்கிறது.

**வியாபார நோக்கில் கல்வி, பெற்றோர்களின் கௌரவப் போட்டி, என்பன மாணவர்களின் சுயமான கற்றலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.**

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையைப் பொறுத்தவரையில் வறுமைப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காகவே இத்திட்டம் இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டது. ஆனால் இப்பரீட்சை யில் தற்போது சித்தியடைபவர்களை எடுத்து நோக்குமிடத்து மேல் நிலை உத்தியோகஸ்தர்களின் பிள்ளைகளே அதிகமாக சித்தியெய்துகிறார்கள். பின் தங்கிய மாணவர்கள் என்றுமே பின்தங்கியே இருக்கின்றனர். இதிலிருந்து சமூகம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அதாவது பின் தங்கிய அல்லது வறுமைப்பட்ட நிலையில் உள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பதானது ஒரு பணக்காரப் பிள்ளைக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பை விட மிகவும் குறைந்தது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும். அதுமட்டுமில்லாமல் ஏழை மாணவன் அல்லது மாணவிக்கு வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. அல்லது வழங்கப்படும் ஒரு சில சந்தர்ப்பங்கள் கூட சரியான முறையில் பயன்படுத்தப்படுவதில்லை. இதுபோன்றுதான் பிரபல கல்வி நிலையங்களுக்கு முன்னால் காத்து நின்று பிள்ளைகளைக் கற்பிக்கும் பெற்றோர்களின் கௌரவப் போட்டியான நிலையும் ஏழைப் பிள்ளைகளைப் பெரிதும் பாதிக்கின்றது.

இவ்வாறான நிலை மாற்றப்பட வேண்டும். அவ்வாறாயின் இம் மாற்றங்களுக்கு சமூகம் என்ன செய்யமுடியும்? வறுமை நிலையில் கல்வி கற்கும் பிள்ளைக்கு ஊக்குவிப்பு வழங்கப்பட வேண்டும்.

சமூகத்தில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் நேரத்தில் குறைந்தது ஒரு வாரத்திற்கு 2 மணித்தியாலத்தையாவது இப் பின்தங்கிய மாணவர்களுக்காக ஒதுக்கி இலவசமாக கல்வி புகட்ட வேண்டும்.

**மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் சமூகமும் தன்னாலான பங்களிப்பை வழங்குவதன் ஊடாக சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்க முடியும்**

ஒரு குறிப்பிட்ட கிராமத்தை எடுத்து நோக்கும் போது அக்கிராமத்தில் குறைந்தது 5 இளைஞர்களாவது இருப்பார்கள். இவர்கள் தங்கள் நேரத்தை வாரத்தில் ஒரு மணித்தியாலத்தை இம் மாணவர்களுக்காக ஒதுக்கி அவர்களுக்கு கல்வி தொடர்பான வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டும். சில குறிப்பிட்ட பாடசாலைகளைப் பொறுத்தவரையில் மாணவர்களைச் சேர்த்தல் என்பது மிகவும் கடினமான விடயம்.

இவ்வாறான சந்தர்ப்பத் தில் கிராமத்து இளைஞர்களில் ஒருவர் குறிப் பிட்ட பாடசாலையுடன் தொடர்புகொண்டு வறுமைப்பட்ட மாணவர் ஒருவரை குறிப்பிட்ட பாடசாலையில் இணைப்பதனூடாக சமூகமா னது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தமுடியும். இதேபோன்று கிராமத்திலுள்ள சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங் கள் என்பவையும் இலவச வகுப்புகளை நடாத்துவதனூடாக கிராம மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் தமது பங்கையும் உணர்த்த முடியும்.

இவ்வாறான நிலையில் குறிப்பிட்ட ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்களிப்பு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை நோக்குமிடத்து தனது பிள்ளையின் கல்வி முன்னேற்றம் தொடர்பில் குறிப்பிட்ட பாடசாலை ஆசிரியர்களுடன் அடிக்கடி கலந்துரையாடி, ஏற்படும் தவறுகளைத் திருத்த வேண்டும், தேவைகளை நிவர்த்தி செய்ய வேண்டும்.

இதேபோன்று பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களுக்கும் முக்கிய பங்குண்டு. அவ்வகையில் தன்னிடம் கல்வி கற்கும் பிள்ளைகளின் பெற்றோர்களை அழைத்து பிள்ளையின் முன்னேற்றம் தொடர்பாக வாராந்தம் கலந்துரையாட வேண்டும்.

இதேபோன்று அடிக்கடி பரீட்சைகளை வகுப்புகளில் நடாத்தி மிகவும் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு சிறிய ஊக்குவிப்பு பரிசில்களை பாடசாலை ஒன்றுகூடல்களில் வைத்து வழங்கி ஊக்கப்படுத்துவதனூடாக பிற மாணவர்களையும் ஊக்கப்படுத்த முடியும்.



தனியார் கல்வி நிலையங்களும் கூட மாணவர்களின் கல்வி வளர்ச்சியல் அக்கறையுடன் செயற்படுவது வரவேற்கத்தக்கது.

இதில் ஒரு செயற்பாடாக வறுமைப்பட்ட மாணவர்கள் சிலருக்கு இலவசமாக சில தனியார் கல்வி நிலையங்கள் தமது கல்வி நிலையங்களில் வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இதேபோன்று ஏனைய கல்வி நிலையங்களும் வறுமைப்பட்ட ஒரு பிள்ளைக்காவது இலவசமாக கல்வி வசதியை ஏற்படுத் திக் கொடுக்க முன்வரவேண்டும்.

**திருமால் திருசாந்**
SOND நிறுவனம்
யாழ்ப்பாணம்

இவ்வாறு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதிக முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் அதாவது சமூகமானது தம்மாலான பங்களிப்பை வழங்குவதன் ஊடாக யாழ்.மாவட்டத்தில் சிறந்த கல்விச் சமூகத்தை உருவாக்க முடியும்.

# யாழ்.-கொழும்பு சீரான பஸ் சேவை குறித்து இன்னமும் முடிவில்லை

## யாழ்.மக்கள் போக்குவரத்துச்சபை தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து நாட்டின் தென் பகுதிக்கு ஏ9 வீதியூடாக கடந்த 22 ஆம் திகதி பரீட்சார்த்த பேருந்து சேவையே நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையான சேவை குறித்து தங்களுக்கு எந்த விதமான அறிவததலும் இன்னும் வழங்கப்படவில்லை என யாழ்ப்பாண மக்கள் போக்குவரத்துச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியின் விசேட ஆலோசகரும், வடக்கின் வசந்தம் திட்டப் பணிப்பாளருமாகிய பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷவினால் கடந்த புதன்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தப் பேருந்து சேவையில் 5 பேருந்துகளில் 210 பயணிகள் யாழ்ப்பாணத்திலிருந்து மதவாச்சிக்கு எற்றி வரப்பட்டார்கள்.

இந்தப் பயணிகளை மதவாச்சியில் உள்ள வீதிச் சோதனைச் சாவடியில் இறக்கிவிட்ட 5 பேருந்துகளும் பயணிகளின்றி வெறுமையாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த பேருந்து சேவை ஒன்றுவிட்ட ஒரு தினம் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த படி நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை பேருந்து சேவை நடைபெறவில்லை.

இந்தச் சேவையை நடத்துவது குறித்து தங்களுக்கு உரிய உயரதிகாரிகளிடம் இருந்து அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை என்றும் யாழ்.மக்கள் போக்குவரத்துச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

மதவாச்சி வீதிச் சோதனைச் சாவடியில் இறக்கி விடப்பட்ட யாழ்.பயணிகள், அவர்களுக்கென அங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அனுராதபுரம் மக்கள் போக்குவரத்துச் சேவைக்குச் சொந்தமான பேருந்துகளில் கொழும்பு உட்பட நாட்டின் வெவ்வேறு இடங்களுக்கும் தமது பிரயாணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையில் ஏ9 வீதியில் பேருந்து சேவை நடத்தப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும் இந்த பேருந்து சேவையில் இருவழிப் போக்குவரத்தில் பயணிகள் எவ்வாறு பிரயாணம் மேற்கொள்ள முடியும் என்பது குறித்த விபரங்களை அரசு வெளியிடவில்லை.

ஆரம்ப தினத்தன்று யாழ்ப்பாணத்திலிருந்து நாட்டின் தென்பகுதிக்கு கப்பலில் பிரயாணம் மேற்கொள்வதற்கு யாழ். நகருக்கு வந்த பயணிகளே பேருந்துகளில் ஏற்றி அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

# குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் ரங்கே பண்டார எம்.பிக்கும் அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டாரவை விசாரணைக்கு வருமாறு கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.

பாலித்த ரங்கே பண்டார எம்.பியை நாளை திங்கட்கிழமை நண்பகல் 12.30க்கு முன்பதாக ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எமது தேசிய முன்னணியின் தலைவரும் மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர கடந்த வாரம் இவ்வாறு கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவு திணைக்களத்தினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இதனைப் போலவே பாலித்த ரங்கே பண்டார எம்.பி.யும் விசாரணைக்குட்படுத்தப்படவிருப்பதாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு எழுத்துமூலம் அறிவித்திருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பாலித்த ரங்கே பண்டார எம்.பி.கூறுகையில், கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவுத் திணைக்களத்தின் பணிப்பாளரிடம் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது.

இதன்போது என்னை விசாரணைக்குட்படுத்த வேண்டும் என்றும் எதிர்வரும் 27 ஆம் திகதி நண்பகல் 12.30க்கு முன்பதாக ஆஜராகுமாறும் கூறப்பட்டது. இதற்கான காரணத்தைக் கேட்டபோது மங்கள சமரவீர எம்.பி. விசாரணைக்குட்படுத்தப்பட்டதைப் போன்றதொரு விசாரணையே என்னிடமும் மேற்கொள்ளப் போவதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவரிடம் இருந்து வந்த அழைப்பு என்பதற்கமைய அதற்கு கௌரவமளித்து ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளேன் என்றார். (ஓ-6)

# பாடசாலை மாணவர்கள் —52 பேருக்கு மயக்கம்—

(கொழும்பு)

புசல்லாவ புறோட்டப் மேமலை தமிழ் வித்தியால்ய மாணவர்கள் 52 பேர் நேற்று முன்தினம் காலை திடீரென சுகவீனமடைந்ததையடுத்து அவர்கள் புசல்லாவ அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக பாடசாலையின் அதிபர் கே. மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று காலை கூட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் சிலர் மயக்கமடைந்ததாகவும் சிலர் வாந்தி எடுத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இப்பாடசாலை மாணவர்களில் 52 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டதாகவும் அவர்களில் ஏழு மாணவர்களைத் தவிர ஏனையவர்கள் சிகிச்சைக்குப் பின்னர் வெளியேறியுள்ளதாகவும் பிரதேச சுகாதார அதிகாரி ஆர்.என். கே. வியதிபிட்டிய தெரிவித்துள்ளார்.

மாசடைந்தமையால் நச்சுத்தன்மை டைந்த நீரினைப் பருகியதனாலே மாணவர்கள் மயக்கமுற்றதாக அவர் தெரிவித்தார். (ஓ-6)

# உறவுகளை கொண்டாடுங்கள் தனிமை தவிர்க்கப்படலாம்

சிலர் யாரிடமும் நட்பு வைத்துக் கொள்ளாமல் தன்னைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வேலி போட்டு வைத்திருப் பார்கள். இதனால் மற்றவர்கள் நெருங்க முடியாத அளவுக்கு ஒரு இடை வெளி நிரந்தரமாகி விடும். இப்படிப்பட்ட வர்களின் அதற்கடுத்த நாட்கள் பெரும் பாலும் தனிமையில் தான் கழியும்.

இதற்கு சில காரணங்கள் இருக்கா லாம். குடும்ப சூழ்நிலை சிலரை தனித்து வைக்கும் ஏடா கூடாமாக பழகி அதனால் ஏற்பட்ட அவமானங் கள் நட்பா வேண்டாம் சாமி என்று ஒதுங்க வைக்கும்.

இன்னும் சிலருக்கு மற்றவர்களி டம் தங்களை அறிமுகப்படுத்திகொள் வதில் கூட கூச்சம் அவர்கள் வளர்ந்த சூழ்நிலை அப்படியிருக்கலாம் யாராவது நட்பு முறையில் தங்களை அறிமுகப் படுத்தினால் கூட ஒரு *ஹலோ* வுடன் நகர்ந்து விடுவார்.

இப்படி நட்பு பாராட்டத்தெரியாத வர்கள் தான் பெரும்பாலும் தனி மைப் பட்டுப் போவார்கள்.

சிலருக்கு நட்பு தலைக்கு கத்தியாக கூட அமைந்திருக்கும் வேண்டாத நண் பர் என்று தெரிந்த பிறகு அவரை கண் டிக்கவும் முடியாமல் நட்பை துண்டிக்க வும் முடியாமல் இவர் கள் பெரும்பாடு பாடுவார்கள்.

சிலர் இப்படித்தான் சமூக விரோத கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று தெரி யாமல் நட்பு பாராட்டி விட்டு அப்புற மாய் அவர்களை தெரிந்த பிறகு அவர் களிடம் இருந்து விலக முடியாமல் தவித்துக்கொண்டிருப் பார்கள்.

நண்பர்கள் குறைவாக இருந்தாலும் நல்ல நண்பர்களாக சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு ஆறு மாதத் திற்குள் நண்பர்கள் ஒருவருக் கொருவர் குணா



திசயங்கள் தெரிந்தும் போகும். அப் போது நட்பை நீடிக்கலாமா? வேண் டாமா என்பதை தீர்மானித்துக் கொள் ளலாம். சிலர் நன்றாக வாழ்கின்ற கால கட்டத்தில் யாரையும் சேர்த்துக்கொள்ள மாட்டார்கள் எங்கே கடனாக பணம் கேட்டு விடுவார்களோ என்று பயம்.

இவர்களே பின்னாளில் தாத்தா அந் தஸ்துக்கு உரியவராகும் போது வீட்டுத் திண்ணையில் தனிமை வாழ்க்கை தொடங்கி விடும். கையில் பணப் புழக் கம் இருக்கிற காலத்தில் யாருக்காவது உதவினால் அவர்களாவது ஒரு பேச் சுக்கு வந்து எட்டிப் பாா்ப்பாா்கள் இப் போது அதுவும் இல்லாமல் போய் விட் டது.

சிலர் உறவு நட்பு என்று ஏக்கத்துக் கும் கைகோர்த்துக் காத்துக்கொண்டி ருக்கும் நாட்களில் என்னைத் தனியே விடுங்கள் என்பார்கள்.எழுத்தாளர்க ளாக இருந்தால் கூட தனிமையில் புதிய படைப்புகள் உருவாக வாய்ப்பு உண்டு மற்றவர்கள் தனி மைப்படுத்தப் படும் போது அதுவும் தாங்களாக தங் களை தனிமைப் படுத்திக்கொள்ளும் போது அப்படி என்ன சாதிப்பார்கள் என்பது அவர்களுக்கே புரியாத விஷ யம்.

பெருநகரங்களில் குடியிருப்பவர் கள் பலரும் பூட்டிய கதவுக்கு பின்னே தான் வாழ்க் கையைநகர்த்துகிறார்கள் எதிர் பிளாட்டில் யார் இருக்கிறார் என்பதை தெரிந்து கொள்வதில் கூட அலட்சியம்.

சிலர் இருக்கிறார்கள் கொஞ்சம் தனிமை கிடைத்தாலும் உடனே தூங்கி அடுத்த கட்ட பணிக்கு ப்ரெஷ் செய்து கொள்வார்கள் இப் படிப்பட்டவர்கள் பெரும்பாலும் கலகலப் புக்கு சொந் தக்காரர்களாக இருப்பார்கள்.

இன்றைய நாட்களில் பலரது தனி மைக்கும் காரணம் அவர்களாக தாங் கள் உறவு எல்லையை நட்பு வலயத்தை சுருக்கிக் கொண்டது தான். என்று சமீபத்திய ஓர் ஆய்வில் தெரிய வந் துள்ளது. கூட்டுக்குடும்பம் வேண்டாம் தனிக்குடித்தனமே போதும் என்று திருமாணமான மறுநாளே தனிமையை நாடி முதல் அடி எடுத்துவைப்பவர்கள் இவர்களாகத்தான் இருப்பார்கள். இலாப நோக்குடன் நட்புக்கரம் நீட்டப்படும் பல கைகைள் தொடர்ந்து அப்படியே நேசக் கரம் நீட்டிக்கொண்டிருப்பதில்லை. ஒரு கட்டத்தில் உண்மை தெரிந்து நட்பு பிய்த்துக் கொண்டு விடும்.

பிறகு தனிமை உணர்வுக்குள் குற்ற உணர்வில் சில காலம் கழிக்க வேண்டி வரும். நல்ல நட்பை தொடருங்கள். உறவுகளை கொண்டாடுங்கள். தனி மை எக் காலத்திலும் உங்களுக்கு நேராது.

# வீட்டுச் செலவுகள் வரம்பு மீறலாகாது

தாய்ததந்தை,பிள்ளைகள் என்ற உறுப்பினர்கள் அடங்கியது தான் சிறந்ததொரு குடும்பம். நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்று கூறு மாப் போல் குடும்ப அங்கத்த வர்க ளின் பங்களிப்பு ஒரு சிறந்த குடும்பத் துக்கு அத்திவாரமாக இருக்க வேண் டியது அவசியமாகிறது.

இன்று நாட்டில் விலைவாசி உயர்வு எவரெஸ்ட் சிகரத்தை எட்டி நிற்கின் றது. வீட்டில் எதற்குச் செலவழிப்பது எதை விடுவது என்ற திண்டாட்டத்தில் குடும்பத் தலைவியும், தலைவனும் வாழ்ந்து கொணடிருக்கும் காலகட்டம் இது.

வீட்டில் மூன்று வேளை பிள்ளை களுக்கு திருப்தியாக உணவளிக்க வேண் டும்.அவர்களின் கல்விக்கு உதவ வேண்டும், போக்குவரத்துகளுக் கான



செலவு என்று அன்றாடம் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது.

காலை உணவுக்குப் பாண்,மதியத் தில் சோறு, இரவில் பலகாரம்-இப் படித்தான் மூன்று வேளை உணவும் அனேகமான வீடுகளில் வரையறுக் கப்படுகின்றது.ஆனால், அதிகமான பிள்ளைகள் பாண் உண்பதற்கு விரும்பு வதேயில்லை.ஏதேனும் பல காரமா என்றால் அதுவும் இல்லை. “பாஸ்ட் புட்” தான் வேண்டும்.அவற்றின் விலை யெல்லாம் இன்று வெகுவாக உயர்ந்து விட்டது. இது விடயத்தில் சிறுவர்கள் தான் அடம்பிடிக்கிறார்கள் என்றால், வயது வந்த இளம் பிள்ளைகளும் அதே நிலை யில் தான் .

வயது கூடக்கூட பிள்ளைகளின் சிந் தனையும் வளரவே செய்கின்றது. ஆனால் வீட்டு நிலைமையைப் பற்றி இவர்கள் அதிகமாகச் சிந்திப்பதில்லை. இதனால் வீட்டுப் பொருளாதார சிக்கல்களும் இவர் களுக்குப் புரிவதில்லை. இதற்கு அன்னை யரும் ஒருவகையில் காரணகர்த்தாக்களா கின்றனர்.

வீட்டின் பொருளாதார நிலை என்ன என்பதை அன்னையர் தம் பிள்ளைக ளுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அவ சியம். அதுமட்டுமல்ல, தமது வரவுக் கேற்ப செலவு செய்ய வேண்டியதன் அவசியம் பற்றியும் அவர்களுக்கு அறி வுறுத்தப்பட வேண்டும்.

வீட்டுச்செலவுகள் வரம்பு மீறுமா னால் பெற்றோரோடு சேர்ந்து தாமும் அவதிப்பட நேரிடும் என்பதையும் பிள் ளைகள் உணரவேண்டும். தம்மால் முடிந்தளவு வீட்டுப் பொருளாதார நெருக்கடிக்கு உதவும் மனப்பக்குவம் அவர்களுக்கு வரவேண்டும். அப்போது தான் வீட்டு நிலை அறியாது, தாம் விரும் பியபடி நடப்பதற்கு அவர்கள் துணிய மாட்டர்கள்.

அண்மையில் நம் நாட்டின் கரை யோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் எமது பிள்ளைகளுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும். அனர்த்தால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பிள் ளைகள் இன்னமும் அகதி முகாம்களில் படும் அவலங்களை இளம் பிள்ளை கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அனர்த்தம் ஏற்பட்ட ஆரம்ப காலத்தில் உடுப்பதற்கு உடையின்றி , பசியாற உண வின்றி, படுக்கப் பாயின்றி பிள்ளைகள் பட்ட அவலங்கள் தாம் எத்தனை எத் தனை?

இவற்றையெல்லாம் காதால் கேட் டும், டி.வி செய்திகளில் பார்த்தும், பத் திரிகைகளில் படித்தும் அறிந்து கொள் ளும் போது, அவர்களை விடத் தாம் எத் தனை மேல் என்ற எண்ணம் பிள்ளை கள் மனதில் எழவேண்டும்.

உணவின்றி, உடையின்றி அவர்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே, நாமோ உணவில், உடையில் பிடிவா தம்பிடித்து பெற்றோரை வருத்து கின்றோமே என்ற பரிதாப உணர்வு எற்படவேண்டும். இந் தளவு நமக்குக் கிடைப்பதே பெரிது என்ற சிந்தை எழுமானால் அவர்கள் ஒருபோதும் தம் பெற்றோரைக் கஷ்டப் படுத்த மாட்டார்கள்.

அநேகமாக நடுத்தர வர்க்கக் குடும் பத்தில் தான் இத்தகைய சிக்கல்கள் உள்ளன. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளே உணவில், உடை யில் அதுவேண்டாம் இது வேண்டாம் என அடம்பிடிக்கின்றனர். அவற்றை வேண்டாமென ஒதுக்கித் தள்ளி விடு கின்றனர். பெற்றோரை வாட்டி வதைக் கின்றனர். இதனால் தான் வீட்டின் செலவுகள் வரம்பு மீறிப் போகின்றன என்பதை இவர்கள் ஏனோ சிந்திப்ப தில்லை. இருக்கின்றது என்று தாராள மாகச் செலவழிக்கவோ அல்லது இல்லை என்று ஒரேயடியாகப் புறந்தள்ளி விடவோ முடியாத நிலை நடுத்தர வர்க் கப் பெற்றோருக்கு. இந்த நிலையில் அவர்களுக்கு கைகொடுக்க வேண்டிய வர்கள் இளம் பிள்ளைகளே.

இருப்பவர்களுக்கு எல்லாமே இருக் கும் கவலையில்லை. இல்லாதவர்க ளுக்கு எதுவும்இல்லை. ஆனால் அதைப் பற்றி அவர்கள் கவலைப் படுவ தில்லை. ஆனால், இவை இரண் டுக்கும் இடைப்பட்ட நிலையில் வாழ்வோருக் குத்தான் கஷ்டங்கள் அதிகரித்துக் காணப் படுகின்றன. இத்தகையோர் சிறுவயதி லிருந்தே பிள்ளகைளுக்கு தமது வீட்டு நிலைமையைத் தெளிவுபடுத்திவிட வேண்டும்.அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என நினைத்து, தமது வர வுக்கு மீறி செல ழிப்பதால் மேலும் கஷ் டங்களே வந்து சேரும் என்பதை மறந்து விடலாகாது.

வீட்டுச்செலவுகள் வரம்பு மீறுமா னால், அங்கே கடன் உட்புகுந்து விடு வதைத் தடுக்க முடியாது போய் விடும். சாதாரண கடன் வட்டிக் கடனாக மாறும். வட்டி குட்டி போடவே நிலைமை அதல பாதாளமாகி விடும். எனவே இது விடயத்தில் பெற்றோரும் சிந்திக்க வேண்டும். அதே வேளை நடுத்தரவர்க் கத்தைச் சேர்ந்த இளம் பிள்ளைகள் தம் குடும்ப நிலை பற்றிச் சிந்தித்துச் செயலறாற்றவும் வேண்டும். உனக்கும் கீழே உள்ளவர் கோடி-நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு என்றான் கவிஞன் ஒருவன். அவன் கூற்றுக் கேற்ப நாமும் வாழ்வோம் அமைதி காண்போம்.



# Lifeline மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

## இடம்பெயர்ந்த மக்களின் உணவுத்தேவைகளும் உலக உணவுத்திட்டத்தின் உணவு விநியோகமும்

இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு உணவு வழங்கும் பணிகளை அரசுடன் இணைந்து உலக உணவுத் திட்டம் மேற்கொண்டு வருகிறது. சுமார் இரண்டு இலட்சத்து எண்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் உலக உணவுத் திட்டத்தினால் வழங்கப்படும் உணவைப் பெற்றுக் கொள்கின்றனர்.

நிவாரணக் கிராமங்களில் வாழும் மக்களுக்கு செப்டெம்பர் மாதம் இறுதி வரையில் உணவு வழங்க உலக உணவுத் திட்டம் திட்டமிட்டுள்ளது. குடும்பங்களுக்கான தனிப்பட்ட உணவு விநியோகத்தையோ அல்லது சமுதாய சமையல் நடவடிக்கைகளுக்கான உணவு விநியோகத்தையோ மேற்கொள்வதற்கான பொருட்களை தம்மால் வழங்கக்கூடியதாக இருக்கும். இதனை தடையின்றி செப்டெம்பர் மாத இறுதிவரை மேற்கொள்ளலாம். இது தொடர்பில் உதவி வழங்குநர்களுடன் இணைந்து உலக உணவுத் திட்டம் செயலாற்றி வருகிறது.

இந்த விநியோக நடவடிக்கைகளை இவ்வாண்டு இறுதி வரையில் மேற்கொள்வதற்கான கலந்துரையாடல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன என உலக உணவுத்திட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி அட்னான்கான் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தொடர்ந்து தெரிவிக்கையில், ''அரசு மேற்கொள்ளவுள்ள மீள்குடியேற்ற நடவடிக்கைகளுடன் எமது சேவையும் அவசியமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இடம்பெயர்ந்தவர்கள் முகாம்களிலேயே இருந்தாலும் சரி அல்லது அவர்கள் மீள்குடியேற்றப்பட்டாலும் சரி அவர்களுக்கு உணவுத் தேவை இருக்கின்றது. அரசின் அறிவிப்பின்படி, இடம்பெயர்ந்தவர்கள் எப்போது மீள்குடியமர்த்தப்பட்டாலும் அவர்களுக்கு உணவு வழங்க வேண்டிய தேவை இருக்கும். காரணம் அவர்கள் உடனடியாகத் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியாது. அவர்களால் உடனடியாக வருமானம் ஈட்ட முடியாது. எனவே மீள்குடியேற்றப்பட்ட காலப் பகுதியிலும் சில உணவுத் தேவைகள் அவர்களுக்கு இருக்கும்.

இது தொடர்பில் எமது உதவி வழங்கும் நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். எம்மிடம் போதுமான அளவு உணவு இருக்கின்றது. ஆகவே மீள்குடியேற்றத்தின் போதும் அரசிற்கு உதவி வழங்க முடியும் என்றார்.



வவுனியா முகாமில் உணவுக்காக காத்திருக்கும் இடம்பெயர்ந்த மக்கள்

இதேவேளை, தற்போதைய உலக உணவுத் திட்டத்தின் திட்டங்கள் அனைத்தும் செயற்திட்ட ஏற்பாடுகளைப் பொறுத்தே உள்ளன என்று அட்னான்கான் தெரிவித்துள்ளார். இவ்வாண்டு இறுதியில் அனைத்து இடம்பெயர்ந்தவர்களும் மீள்குமடியேற்றப்படவுள்ளார்கள். அதனால் உலக உணவுத் திட்டத்தின் சேவைகளை இந்த ஆண்டின் இறுதி வரை நீடிக்க உலக உணவுத் திட்டம் திட்டமிட்டுள்ளது.

மாற்றங்கள் நேருமாயின் அரசுடனும் தம்முடைய உதவி வழங்கும் நிறுவனங்களுடனும் இணைந்து செயற்பட்டு இந்த மாறுபட்ட சூழ்நிலையில் எவ்வாறு மக்களுக்கு உதவ முடியும் என்பதை கவனிக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் ஒவ்வொரு முகாமிலும் 20 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரையிலான மக்களை தங்க வைக்க வேண்டும் என்பதே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அரசிற்கு வழங்கிய ஆலோசனை. அதற்கு மேலதிகமாக வைத்திருக்க வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் குறிப்பாக வலயம் இரண்டில் இதற்கு இரண்டு மடங்கான மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். எனவே இந்த வலயங்களைவிரிவுபடுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இவ்வாறான காரணங்களால் உலக உணவுத் திட்டத்தைப் போன்றே மனிதாபிமான தொண்டர் அமைப்புகளுக்கும் சில சவால்கள் உள்ளன என்று அட்னான்கான் மேலும் தெரிவித்தார். உலக உணவு ஸ்தாபனத்தினால் வழங்கப்படும் உணவில் நாளொன்றுக்கு ஒருவர் 2100 கிலோ கலோரி உணவினை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் 1900 கிலோ கலோரி அடங்கிய பொருட்கள் வழங்கப்பட்டன. அத்துடன் உலக உணவு ஸ்தாபனமானது அரிசி மற்றும் எண்ணெய் ஆகியவற்றின் அளவினையும் அதிகரித்து வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் வாழ்வோம்

''மீண்டும் வாழ் வோம்'' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ் நிலைகளினால் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள் குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்து பட்ட மனிதாபிமான செயற்றிட்ட அமைப்புக்களின் ஓர் அங்கமாகும்.

## உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் உங்கள் கதைகள் இடம்பெற்று வருகின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்குப் பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குவதே எமது நோக்கம்.

## இடம்பெயர்ந்த சிறுவர்களை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள்

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் சுமார் 1800 வரையிலான குடும்பங்கள் திருகோணமலை புல்மோட்டைப் பகுதியில் அமைந்துள்ள 'சகனகம' நிவாரணக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர். இங்குள்ள சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான பல விஷேட திட்டங்கள் திருகோணமலையில் இயங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. முக்கியமாக இங்கு யுனிசெப் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஆகியன இடம்பெயர்ந்த சிறுவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு தமது செயற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றன. அந்த வகையில் "சகனகம" நிவாரணக்கிராமத்தில் வசிக்கும் சிறுவர்களும் இவற்றினூடாக பயன் பெறுவதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

யுனிசெப் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் ஆகியன இணைந்து 'சகனகம' நிவாரணக் கிராமத்தில் மூன்று சிறுவர் நட்புறவு கூடங்களை அமைத்துக் கொடுத்துள்ளன. கடந்த ஏப்ரல் மாதம் அமைக்கப்பட்ட சிறுவர் நட்புறவுக் கூடங்கள் ஊடாக சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பயன்பெற்று வருகின்றனர். ஆரம்பத்தில் 'சகனகம' நிவாரணக்கிராம சிறுவர்கள் விளையாட்டு செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பமும் இன்றி இருந்தமையாலும் அவர்களுடைய பொழுதுபோக்கு மற்றும் திறன்களை அபிவிருத்தி செய்வதற்கும் இவ்வாறான சிறுவர் நட்புறவு கூடமொன்றுக்கான அவசியம் ஏற்பட்டமையாலும் நாங்கள் இத்திட்டத்தை ஆரம்பித்தோம் என சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு அதிகாரியான ஜெயதர்ஷினி வேதா தெரிவித்தார்.



மெனிக்பாம் முகாமில் உள்ள வன்னியிலிருந்த இடம்பெயர்ந்த சிறுவர்கள்

இத்திட்டமானது இடம்பெயர்ந்த சிறுவர்களுடைய மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் வழிவகுத்துள்ளது என்றே கூறவேண்டும். இங்குள்ள சிறுவர்கள் ஆரம்பத்தில் எந்தவொரு செயற்பாடுகளிலும் ஆர்வமின்றியும் தனித்தும், விளையாட்டு செயற்பாடுகளை விரைவில் புரிந்து கொள்ள முடியாத நிலையிலும் காணப்பட்டுள்ளனர்.

ஆனால் தற்போது சிறுவர் நட்புறவுக் கூடத்தின் ஊடாக அதிகமான புதிய விடங்களை அறிந்து கொண்டுள்ளதுடன் குழுக்களை அமைத்து அனைத்து விடயங்களிலும் முன்னின்று செயற்படுவதாகவும் மகிழ்ச்சிகரமான மனநிலை அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளதாகவும் ஜெயதர்ஷினி வேதா குறிப்பிட்டார்.


வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்கள் மற்றும் நிவாரணக் கிராமங்களில் தமது பெற்றோர்களை இழந்த மற்றும் குடும்பங்களை விட்டு பிரிந்த சிறுவர்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிலர் உளவியல் ரீதியான தாக்கங்களுக்கும் உள்ளாகியிருக்கக் கூடும். எனவே இடம்பெயர்ந்த அனைத்து சிறுவர்களுடைய மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அவர்களுக்கு நம்பிக்கையான புதிய செழிப்பான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் சிறுவர்களுக்காக செயற்பட்டு வரும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் அயராத பங்களிப்பை செலுத்தி வருகின்றன. இவை அனைத்தும் இடம்பெயர்ந்த சிறுவர்களின் எதிர்கால நன்மைக்காகவே.

### உங்கள்எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்
தொடர்பான உங்கள்
மேலான எண்ணங்களையும்
படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம்
நீங்கள் ஓவியம் வரையும் ஆற்றல் மிக்கவர் எனில்
உங்கள் அனுபவங்களை சித்தரிக்கும் ஓவியங்களை
வரைந்து எமக்கு அனுப்பி வையுங்கள்
அவற்றை மீண்டும் வாழ்வோம்
பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல.1039 கொழும்பு
தொ.பே. -0774952242
மின்னஞ்சல்-info@lifeline srilanka.com

## சுகம் தரும் சுத்தம்



சுத்தம் சுகம் தரும் என்பது எமக்கு நன்றாக தெரிந்த விடயம். ஆனாலும் அன்றாடம் இனம் காணப்படாத புதிய நோய்கள் பரவுகின்றன. காரணம் என்ன? மனிதனது ஒழுங்கற்ற செயற்பாடுகள். நாம் சுத்தமாக இருக்க வேண்டும். எம்மைச் சுற்றியுள்ள சூழலைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அழகாக இருப்பதற்கும் சுத்தமாக இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. மனிதனது ஆயுட்காலம் தற்போது குறைவடைந்துள்ளது. அதற்கு ஒரு காரணம் நோய்களின் பரவல். தொற்று நோய்கள் பரவுவதற்கு முக்கிய காரணம் மனிதனிடத்தில் அருகிவரும் சுகாதார பழக்க வழக்கங்கள்.

வீடுகளில் பொதுவாக குறிப்பிட்ட அளவிலேயே உறுப்பினர்கள் இருப்பார்கள். அதனால் ஓரளவுக்கு வீடுகளை சுத்தமாக வைத்திருப்பது இலகுவாக இருக்கும். ஆனால் மக்கள் செறிந்து வாழக் கூடிய அகதி முகாம்கள், நலன்புரி நிலையங்கள் ஆகிய இடங்களில் சுத்தம் சுகாதாரம் பற்றி சிந்திப்பது சற்று அசாதாரணமான விடயமே. ஆனால் இவ்வாறான இடங்களில் சுத்தம் பேணுவது அவசியம். இங்கு வாழும் மக்கள் பலதரப்பட்ட வேதனைகளை மனதில் சுமந்து கொண்டு வாழ்கிறார்கள். இவர் களை நாம் வற்புறுத்துவது சற்று வேதனையான விடயம் தான். ஆனால் அங்குள்ள ஒவ்வொருவரும் தம்மைப் பற்றியும் தமது குடும்ப உறுப்பினர்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

சூழலில் ஆங்காங்கு கிடக்கும் குப்பைகளை எடுத்து குப்பைகளை போடுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் போட வேண்டும். மற்றவர்கள் போட்ட குப்பையை நாம் ஏன் எடுக்க வேண்டும் என்ற மன நிலையை மாற்றிக்கொள்ளுங்கள். காரணம் மாசுபட்டு இருப்பது உங்கள் சூழல். அதே போல் முகாம்களில் குளிக்கும் இடம் எல்லோருக்கும் பொதுவானதாகவே காணப்படும்.

அந்த இடத்தில் சவர்க்காரத் தாள்களை போடுதல், பிளாஸ்டிக் பைகளை போடு தல், துப்புதல் போன்ற செயற்பாடுகளை தவிர்த்துக் கொள்வது எல்லோருக்கும் நன்மை அளிக்கக்கூடிய விடயம். அத்துடன் குளிக்கும் இடங்களில் அழுக்கு நீர் தேங்கி நிற்பதற்கு ஏதுவாக உள்ள பள்ளங்களை நிரப்பிவிட வேண்டும். காரணம் அவ்வாறான இடங்களில் நுளம்பு பெருகுவதற்க வசதியாக இருக்கும். நுளம்பினால் ப்ரவக்கூடிய நோய்கள் பற்றியும் பாதிப்புக்கள் பற்றியும் எமது பகுதியில் பல ஆக்கங்கள் இடம் பெற்றுள்ளன. பொது மலசல கூடங்களை எப்போது கிருமி கொல்லிகள் இட்டு துப்புரவாக கழுவிவிட வேண்டும். அளவுக்கதிமானவர்கள் பாவிக்கும் மலசல கூடங்கள் விரைவாக அழுக்காகி விடும். ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட நலனைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும். மேற்கூறப்பட்ட விடயங்களைப் படித்துப் பார்ப்பதோடு நின்று விடாமல் செயற்படுத்தவும் தயாராகுங்கள்.

''மீண்டும் வாழ்வோம்'' நிகழ்ச்சியானது சூரியன் எவ்.எம். வானொலி யூடாக தினமும் இரவு 9.00 மணி முதல் 10.00 மணி வரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தேசிய சேவையில் திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9.30 மணிமுதல 9.45 மணி வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை (WWW. Internews. lk) என்ற இணையத்தளத்திலும் தரவிறக்கம் செய்யலாம்.

# இடம்பெயர்ந்த முகாம்களில் தங்கியுள்ளவர்களை பாதுகாக்கும் பொறுப்பை ஐ.நா. ஏற்க வேண்டும்

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு



(சென்னை)

இலங்கையில் இடம்பெயர் முகாம்களில் தங்கியுள்ள 3 இலட்சம் தமிழர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை ஐ.நா. ஏற்க வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் கூறினார்.

இலங்கையில் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள 3 இலட்சம் தமிழர்களை விடுவிக்கக் கோரி இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மெமோரியல் ஹோல் அருகே நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் தலைமை தாங்கினார்.

பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, பா.ம.க தலைவர் ஜி.கே.மணி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் மு. வீரபாண்டியன், சிவாஜிலிங்கம் எம்.பி. உட்பட பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கி பழ நெடுமாறன் பேசியதாவது,

இலங்கையில் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளனர். உணவு, மருந்து, உட்பட அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்காமல் துயரப்படுகின்றனர்.

இந்த கொடுமை நீங்க வேண்டும் என்றால், உடனே ஐ.நா. தலையிட்டு 3 இலட்சம் தமிழர்களை பாதுகாப்பதுடன் சொந்த ஊரில் குடியேற்ற வேண்டும்.

ஆனால்இந்திய அரசு உண்மையை உணராமல் இலங்கை தமிழர்களுக்கு சிங்கள அரசு மூலம் உதவ வேண்டும் என்கிறது. நம்முன் நிறைய பணிகள் இருக்கிறது. நாம் ஒற்றுமையாக இருந்து போராட வேண்டும் என்றார்.

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பேசுகையில்,

இலங்கையில் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்கள் மிருகம் போல நடத்தப்படுகின்றனர். சர்வதேச நாடுகளும் இதை எதிர்த்து குரல் கொடுக்கவில்லை. அங்கு முளைக்கும் புல், பூண்டுகள் கூட இலங்கை ஆதிக்கத்தை ஏற்காது. நம் தொப்புள் கொடி உறவுகளை காப்பதற்கு தன்மான உணர்வுள்ள தமிழர்கள் அனைவரும் ஒருசேர குரல் கொடுப்போம் என்றார்.

பா.ம.க நிறுவனர் டாக்டர் ராமதாஸ் பேசுகையில்,

இலங்கையில் நடைபெற்று வருவது ஒரு திட்டமிட்ட சதி தமிழர்களை அழிக்கும் சதி. இந்திய அரசால் திட்டமிடப்பட்டு, இலங்கை அரசால் நடத்தப்படுகிறது. இலங்கையிலுள்ள 3 1/2 இலட்சம் தமிழர்கள் என்ன பாவம் செய்தார்கள். இதை தடுக்க உலக நாடுகள் ஏன்? முன்வரவில்லை மனிதாபிமானம் செத்துப் போய் விட்டதா? இந்திய அரசு கொடுத்த ரூ. 500 கோடி உதவித் தொகை இலங்கையில் வதைபடும் தமிழர்களுக்கு கொடுக்கப்படவில்லை.

உலகில் விடுதலைக்காக போராடிய எந்த இனமும் அழிந்ததாக வரலாறு இல்லை. எங்களை உசுப்பி விட்டுள்ளார்கள். நாங்கள் ஓய மாட்டோம். முன்பை விட முனைந்து செயல்படுவோம்.

இலங்கையில் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள 3 இலட்சம் தமிழர்களை பாதுகாக்க ஐ.நா. பொறுப்பு ஏற்க வேண்டும். இலங்கை தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஒரு பிரகடனத்தை வெளியிட உள்ளோம். அப்போது இங்குள்ள தமிழர்கள் மேலும் எழுச்சி அடைவார்கள் இவ்வாறு டாக்டர் ராமதாஸ் கூறினார். (6)

# மும்பையில் கடல் சீற்றம் அதிகரிப்பு

## கடல் அலைகள் 5 மீற்றர் உயரத்துக்கு மேலெழுகை

(மும்பை)

மும்பையில் கடலின் அலைகள் அபாயகரமான அளவுக்கு மேல் எழும்பக் கூடும் என எச்சரிக்கை விடப்பட்டதால் பொதுமக்களிடையே பீதி ஏற்பட்டது. மும்பையில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்னதாக தொடர்ந்து பலத்த மழை பெய்து வந்தது. கடந்த சில நாட்களாக மழையின் அளவு குறைந்தது. இந்நிலையில், கடந்த வியாழக்கிழமை முதல் மும்பையில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினமும் மிதமான மழை பெய்தது. இந்நிலையில், கடந்த இரு தினங்களாக மும்பையில் கடல் சீற்றம் அதிகரித்துள்ளது. கடல் அலைகள் ஐந்து மீற்றர் உயரத்துக்கு எழும்பியதால் கடற்கரை அருகில் உள்ள பகுதிகளுக்குள் கடல் நீர் புகுந்தது. அங்குள்ள சில வீடுகளிலும் கடல் நீர் புகுந்தது. நேற்று முன்தினம் கடலின் சீற்றம் அதிகரித்து காணப்பட்டது. பலத்த காற்றும் வீசி வருகிறது. மும்பை வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிட்ட அறிவிப்பில், "மும்பையில் தொடர்ந்து பலத்த மழை பெய்யும். கடலின் சீற்றம் அதிகரித்து காணப்படும். சில நேரங்களில் 5.05 மீற்றர் என்ற அபாயகரமான உயரத்துக்கு கடல் அலைகள் மேல் எழும்பக் கூடும். இதனால், மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம்" என தெரிவிக்கப்பட்டது.

குஜராத் மாநிலத்திலும் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. கடற்கரை நகரமான போர்பந்தரில் பலத்த மழையும், காற்றும் வீசி வருகிறது. தாழ்வான பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. மீட்பு பணிகளுக்காக இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. (6)



மும்பையில் கடந்த நூறு ஆண்டுகளில் இல்லாத வகையில் நேற்று முன்தினம் கடல் சீற்றம் அதிகமாக இருந்தது. 17 அடி உயரத்துக்கும் அதிகமாக எழும்பிய இராட்சத அலைகள், தடுப்புச் சுவரைத் தாண்டி வீதியில் விழுவதைப் படத்தில் காணலாம். உள்படம் : மும்பையில் உள்ள "இந்தியாவின் கேற்றை" அண்மித்த பகுதியும் உயரே எழும்பிய அலை நீரால் சூழ்ந்துள்ளது.

பாரதச் செய்திகள்

## பாம்பாட்டி உதவியுடன் நடந்த சட்டசபை

புவனேஸ்வரத்தில் உள்ள ஒரிசா சட்டசபைக்குள் கடந்த வியாழக்கிழமை காலை நல்ல பாம்பு ஒன்று புகுந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வனத்துறையினரும் பாம்பாட்டிகளும் சபைக்குள் வந்து நீண்ட நேரம் தேடியும் பாம்பைக் கண்டு பிடிக்க முடியாததால் பிற்பகல் 3 மணி வரை சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க வேண்டியதாகி விட்டது.

பாம்பு பிடிபடாத நிலையில், சட்டசபை நேற்று முன்தினம் காலை மீண்டும் கூடியது. பாம்பு மீண்டும் வந்து ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டு விடலாம் என்று கருதி வனத்துறையினர், டாக்டர்கள், பாம்பாட்டிகள் ஆகியோரை வரவழைத்து இருந்தனர். டாக்டர்கள் விஷ முறிவு மருந்துகள் மற்றும் அவரசகால மருந்துகளுடன் வந்து இருந்தனர். ஆனால் பாம்பு தென்படவே இல்லை. வனத்துறையினர், டாக்டர்கள், பாம்பாட்டிகள் தயார் நிலையில் இருந்தால் நேற்று முன்தினம் சபை எந்த தடங்கலும் இன்றி வழக்கம் போல நடைபெற்றது. (6)

# இலவச மருத்துவமனையாகும் முதல்வர் கருணாநிதியின் வீடு

கோபாலபுரத்தில் அமைந்துள்ள முதல்வர் கருணாநிதியின் வீட்டை இலவச மருத்துவ மனை அமைப்பதற்காக வழங்குவதாக அவர் அறிவித்துள்ளார்.



இது தொடர்பில் மருத்துவ விழாவொன்றில் கலந்துகொண்டு முதல்வர் கருணாநிதி பேசியதாவது,

கோபாலபுரம் இல்லத்தை 1968 இல் என் பிள்ளைகள் பெயரில் எழுதி பதிவு செய்து உள்ளேன். அந்த இல்லத்தை என்னுடைய மற்றும் எனது மனைவி காலத்துக்கு பிறகு தமிழக அரசுக்கோ அல்லது கலைஞர் அறக்கட்டளைக்கோ உடைமை ஆக்குவது என்றும், அந்த இல்லத்தில் இலவச மருத்துவமனையை என் தாய், தந்தையரான அஞ்சுகம் - முத்துவேலர் பெயரில் நடத்துவது என்றும் அதற்கு என் மனைவி, பிள்ளைகளின் ஒப்புதலைப் பெற்றுள்ளேன் என்பதையும் மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட இந்த விழாவின் போது அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (ஓ-6)

# 6 வயது சிறுவனுக்கு பைபாஸ் சிகிச்சை



(மதுரை)

தமிழகத்தில் முதல் முறையாக 6 வயது சிறுவன் ஒருவனுக்கு பைபாஸ் சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மதுரை வடமலையான் மருத்துவ மனையிலேயே இச் சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது.

திருச்செந்தூரைச் சேர்ந்த சார்லஸ் (வயது 40) ஜெயந்தி தம்பதியினரின் மகனான ஸ்வீட்டன் (வயது 6) என்பவருக்கே இச் சிகிச்சை இடம்பெற்றுள்ளது.

இது குறித்து வைத்தியர் தெரிவிக்கையில்,

ஸ்வீட்டனின் இதய இரத்த குழாய்களில் வீக்கம் அதிகமாக இருந்ததால் எப்போதும் வெடித்து, உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையில் இருந்தது.

சிகிச்சையின் போது நான்கு இடங்களில் பைபாஸ் சிகிச்சை செய்து பழுதடைந்த இரத்தக் குழாய்களை சரி செய்தோம். தீவிர சிகிச்சைக்குப் பின் ஸ்வீட்டன் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளார் என்றார். (ஓ-6)

# பன்முகப் பாண்மையுள்ள பெருங்கவிஞர் 'சாஹித்ய ரத்னா' கலாநிதி முருகையன்

*கவிஞர் கலாநிதி இ.முருகையனின் நினைவு நிகழ்வு அவரது சொந்த ஊரான நீர்வேலியில் அத்தியார் இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இன்று பி.ப. 2.30 மணிக்கு நீர்வைமணி சிவ ஸ்ரீ தியாகராசா குருக்கள் தலைமையில் நடைபெறும்.*

அன்று 27.06.2009 சனிக்கிழமை மதியவேளை தொலைபேசி மூலமாக கொழும்பிலிருந்து வந்த ஒரு செய்தி தமிழ் ஆர்வலர்கள் அனைவரையும் கதிகலங்கச் செய்கின்றது. அது வேறொன்றுமல்ல? கடந்த ஐம்பதாண்டுகட்கு மேலாக தமிழ் இலக்கிய உலகில் தனக்கென நிலையான இடம்பெறும் கவிஞர் கலாநிதி இ.முருகையன் அவர்கள் புகமுடம் பெய்தினார் என்பதே அச்செய்தி.

1967ஆம் ஆண்டிலேயே பேராசிரியர் கைலாசபதி அவர்கள் "நெடும்பகல்" என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் "முருகையனை கவிஞர்க்குக் கவிஞன் என்று நான் பெருமையோடு கூறிக்கொள்வது உண்டு. கவிதை உயிர்த்துடிப்புள்ள இலக்கிய வடிவம் என்று நம்மவர்க்கு இக்காலத்தில் உணர்த்திய கவிஞர்களில் முதன்மை மிக்கவர் முருகையன்" என்று விதந்துரைக்கின்றார்.

1935ஆம் ஆண்டு சாவகச்சேரியில் கல்வயல் எனுமூரில் பிறந்த முருகையன் சாவகச்சேரி இந்துவிலும் யாழ்ப்பாணம் இந்துவிலும் கல்வி கற்றவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்றவர் . பின் சுய ஈடுபாடு காரணமாக இலண்டன் பல்கலைக்கழக பட்டத் தேர்வில் தோற்றி முதற்பிரிவில் கலைமாணிப் பட்டமும் பெற்றவர். தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியற்துறையில் முதுதத்துவமாணிப் பட்டமும் பெற்றார். 1999 இல் இவருக்கு யாழ். பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டமும் வழங்கிப் பெருமை கொண்டது.

நீர்வேலியில் திருமண உறவை ஏற்படுத்திக் கொண்ட கவிஞர் அவர்கள் தமது வாழ்வை நீர்வேலியூரிலேயே நிலை நிறுத்திக் கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உதவிப் பதிவாளராகப் பணி செய்து ஓய்வு பெற்றவர் முருகையன். இந்த வகையில் யாழ்.பல்கலைக்கழகத்துடன் நெருக்கமான தொடர்பிருந்து.எனலாம்.

முருகையனை பாநாடக எழுத்தாளர்களில் முன்னோடியாகக் கருதுவர். அண்மையில் இவர் உருவாக்கி நூல் வடிவுற்ற *கர்வ பங்கம்* என்ற பாநாடக நூலுக்கு முகவுரை வழங்கிய கவிஞர் சோ.ப அவர்கள் "...




முருகையனின் கவிநடையின் செழுமை ஆங்கிலத்தில் இல்லை. கிரேக்கத்தில் இருந்திருக்கும்" என விவரிக்க காண முடிகின்றது.

2007இல் இலங்கை அரசின் கலை இலக்கியப் பணிக்கான அதியுயர் விருதான *சாஹித்ய ரத்னா* விருது கவிஞர் முருகையனைத் தேடி வந்து பெருமைப்படுத்தியுள்ளது. கலாநிதி எம்.ஏ.நுஃமான் அவர்கள் மஹாகவி , நீலாவணன் , முருகையன் ஆகிய மூவரையும் ஈழத்து நவீன தமிழ் கவிதையின் மும்மூர்த்திகள் என்றே நான் கருதி வருகிறேன் என்று கூறுவதும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. மிக அடக்கமாக வாழ்ந்த முருகையன் அவர்களுக்கு எழுதுகோலின் துணையுடன் புதியதோர் உலகு செய்யும் பேரவா இருந்திருக்கின்றது.

கவிதை, நாடகம், ஓவியம், புராணபடனம் என பன்முகப்பட்ட ஆற்றல்கள் பொருந்திய முருகையன் நல்ல நகைச்சுவை உணர்வும் உடையவர். பேராசிரியர் சிவத்தம்பி இதனால் தான் முருகையனை (Intelectualist Poet) புலமைமிகு கவிஞன் விவரிக்கிறார். சுமார் 24 நாடகங்கள், ஏராளமான கவிதைகள், காவியங்கள் என தமிழன்னைக்கு பாமாலைகள் சாற்றிய நீர்மைமிகு உள்ளத்தவரான முருகையன் இன்றோ இறைவனடி சார்ந்திருக்கின்றார்.

முருகையன் சமூகச்சார்பை முன்னிறுத்தியே தன் படைப்புகளை உருவாக்கியிருந்த போதும் இறுதிக் காலத்தில் சமயசார்பான படைப்புகள் சிலவும் உருவாக்கியிருக்கின்றார். இலங்கைக்கு அப்பால் தமிழகத்திலுள்ள தமிழ் ஆர்வலர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட முருகையனை காலத்தால் மறக்கவியலா கவிப்பொக்கிஷம் எனலாம்.

தி. மயூரகிரி நீர்வேலி,

## அரசின் சமாதானச் செயலகம் இம்மாதம் மூடப்படும் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க

(கொழும்பு)

அரசின் சமாதானச் செயலகம் இம் மாதம் 31ஆம் திகதியுடன் மூடப்படும் என அதன் பணிப்பாளராக இருந்தவரும் தற்பொழுது அமைச்சு ஒன்றின் செயலருமான பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு போரை ஆரம்பித்த உடனயே சமாதான செயலகத்தின் பணிகளை முடக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை இரத்துச் செய்யப்படும் வரை ஆர்ப்பாட்டங்கள் தொடரவேண்டும்

### சோமவன்ச அமரசிங்க தெரிவிப்பு


(கொழும்பு)

யுத்த வெற்றிகளை தனியொரு நபர் அனுபவிக்க முடியாது என ஜே.வி.பி. கட்சி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க வலியுறுத்தியுள்ளார். பயங்கரவாதத்தை தோற்கடித்தல் மற்றும் மக்கள் மீது சுமைகளை சுமத்துவதும் ஒரே கோணத்தில் நோக்கப்பட முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பிரிவினைவாதம் கொக்கேன் போதைப்பொருளுக்குப் பதிலாக கெக்கேனை அறிமுகப்படுத்துவதற்கு நிகரானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏன் காணி மற்றும் காவல் துறை அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்படக் கூடாது என்ற தலைப்பில் குருணாகலில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வெற்றிகளை தனிப்பட்ட சிலர் மொத்தமாக அனுபவிக்க முயற்சி மேற்கொண்டு வருவதாகவும் இந்த வெற்றி மஹிந்த ராஜபக்ஷவிற்கோ அல்லது வேறு ஒரு தனி நபருக்கோ சொந்தமானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்,யுத்தத்தில் இன்னமும் பூரண வெற்றி கிட்டவில்லை எனவும், இன்னும் பல வெற்றிகள் எஞ்சியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என குறிப்பிட்ட அவர் பயங்கரவாத தடுப்பு வேறு- மக்கள் மீதான அடக்குமுறை வேறு என சுட்டிக்காட்டியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை இரத்துச் செய்யப்படும் வகையில் நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் தொரடப்பட வேண்டும் என ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். (ஓ-6)

## ஊனமுற்ற படைவீரர்களுக்கு பூரணமான ஓய்வூதியக் கொடுப்பனவு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

யுத்தத்தின் போது காயமடைந்த இராணுவப் படைவீரர்களுக்கு பூரணமான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.யுத்த நடவடிக்கைகளின்போது ஊனமுற்ற படைவீரர்களுக்கே இந்த சலுகை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தத்தில் ஊனமுற்றபடைவீரர்களுக்கு முன்னர் பகுதியளவு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது.

எனினும் பகுதியளவு ஓய்வூதி யப் பணத்தின் மூலம் படைவீரர்கள் தங் களது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எனவே, ஊனமுற்ற படைவீரர்களுக்கு பூரணமான ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஓ-6)

## போலி விசா மூலம் லண்டன் செல்ல முற்பட்ட இலங்கையர் கைது

(கொழும்பு)

போலிகடவுச்சீட்டு மற்றும் விசாவைப் பயன்படுத்தி லண்டனுக்கு செல்ல முற்பட்ட இலங்கையர் ஒருவரை பெங்களூர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ரத்னம் நிக்சன் எனப்படும் 33 வயதுடைய இலங்கையரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் வாழைச்சான்பட்டி என்னும் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சென்னையைச் சேர்ந்த நபர் ஒருவரது கடவுச் சீட்டைப் பயன்படுத்தி இவர் லண்டனுக்கு செல்ல முற்பட்டுள்ளார்.

ஜூலை மாதம் 13ஆம் திகதியுடன் நிறைவடைந்த விசாவைப் பயன்படுத்தி அவர் லண்டன் செல்ல முற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

கடந்த 24.06.2009 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப ஒளிவிளக்கு

அமரர்

**திருமதி நடராசா தனலட்சுமி**



அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.07.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகைதந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கட்டப்பிராய்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

(2873 இ- 29)

முதலில் தூசியை கிளப்பி விடுகிறோம். பின்னால் பார்க்க முடியவில்லை என்று முறையிடுகின்றோம்.

– பிஷப் பார்க்லி

வலம்புரி

## பேரினவாத சிந்தனையை உடைக்க ஏகபோக உரிமையில் தமிழ்க்கட்சி தேவை

இலங்கையில் இரண்டு பிரதான கட்சிகளும் போதும். ஏனைய கட்சிகள் பிரதான கட்சிகளுடன் இணைந்து கொள்ள வேண்டுமென்பது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு.

- ஜனாதிபதியின் இந் நிலைப்பாடு அவரின் சொந்த நிலைப்பாடல்ல.

மாறாக பெரும்பான்மை சிங்கள புத்திஜீவிகளின் தீர்க்கமான முடிவு.

விகிதாசார பிரதிநிதித்துவ ஆட்சிமுறையை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அமுல்படுத்தினார்.

அதனால் சிங்கள மக்களின் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை பாதுகாக்கப்பட்டதுடன் , இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் இனம் எதிர்க்கட்சி தலைமையை எக் காலத்திலும் பெற முடியாதவாறு எல்லையிட்டார்.

இப்போது இலங்கையில் இரண்டு பிரதான கட்சிகள் போதும். ஏனைய கட்சிகள் இரு பிரதான கட்சிகளுடன் இணைந்து தமது கோரிக்கைகளை முன் வைக்க வேண்டும் என கூறப்படுகிறது.

இதற்கு அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளை உதாரணமாக தூக்கி நிறுத்துகின்றனர்.

அமெரிக்காவில் இரண்டு கட்சி நடைமுறையை உதாரணத்திற்கு காட்டும் போது , அந்த நாட்டிலுள்ள ஜனநாயக பண்புகளையும் மனித உரிமைகளையும் ஒரு கணம் சிந்திப்பது கட்டாயமானதாகும்.

எனவே, இலங்கையில் இரு கட்சி நடைமுறை கொண்டு வரப்படுமாக இருந்தால், அதனைத் தமிழ்க் கட்சிகள் மௌனமாக பார்த்திருக்குமாயின் தமிழ் இனத்தின் அரசியல் தலைமை சிங்களமாக மாற்றமடையும்.

எனவே இது விடயத்தில் தமிழ்க் கட்சிகள் தூர நோக்குடனும் இனப்பற்றுடனும் செயற்பட வேண்டும்.

இரு பிரதான கட்சித் திட்டத்தை உடைக்க தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து தனித்துவத்துடன் சுவடியதான ஏகபோக உரிமையுடைய ஒரு கட்சியை உருவாக்குவது அவசியமாகும்.

தமிழர்கள் தமக்கென– ஒரு அரசியல் கட்சியை அமைத்து அதனைத் தமிழ் இனத்தின் தலைமையாக அறிமுகப்படுத்துவதன் மூலம், இரு பிரதான கட்சி என்ற கோட்பாடு உடைக்கப்படும்.

அதேநேரம் இனப் பிரச்சினை தொடர்பில் யாருடன் பேசுவது ,யார் தமிழ்த் தலைமை என்பதை இனங்காண முடியவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை முறியடிப்பதுடன் சர்வதேச சமூகத்திடம் தமிழ் தலைமை இதுதான், எங்கள் கருத்தைக் கேளுங்கள் என நிறுத்திட்டமாக கூறவும் முடியும் . அதுவே தமிழர்களுக்கு கொஞ்சமேனும் உரிமையைப் பெற்றுத் தரும்.

# அதிகாரப் பகிர்வு தொடர்பிலான ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## ரில்வின் சில்வா திட்டவட்டம்

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஜே.வி.பி. இதுவரை கொண்டிருந்த கடுமையான நிலைப்பாட்டைக் கைவிட்டு விட்டது என்று வெளியான செய்திகளில் எந்த விதமான உண்மையும் இல்லை என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். அவையெல்லாம் வெறும் வதந்திகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜே.வி.பி. எப்பொழுதும் இலங்கையின் ஒருமைப்பாட்டை அதாவது ஒரே இலங்கை என்ற கொள்கையை ஆதரித்தே வாதாடும் என்று கூறிய ரில்வின் சில்வா, இந்த விடயத்தில் கட்சி தனது கடுமையான நிலைப்பாட்டைக் தளர்த்திக் கொண்டு விட்டது என்று வெளியான செய்திகள் ஆதார மற்றவை என்றார்.

அது மட்டுமல்லாது அரசமைப்பின் 13 வது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுவதையும் ஜே.வி.பி ஆதரிக்காது. அவ்வாறு செய்தால் அது நாட்டின் ஒருமைப் பாட்டை பாதிக்கும் என்றும் சுட்டிக்காட்டினார்.

எந்த விதமான சமஷ்டி ஏற்பாடுகளையும் கூட ஏற்றுக் கொள்வதற்கு ஜே.வி.பி. தயாராக இல்லை. அவ்வாறு செய்தால் அது இராணுவ ரீதியில் தமது இலக்கை அடைவதில் தோல்வி கண்டிருக்கும் பிரிவினைவாதிகளுக்கு அது உதவியாக அமைந்துவிடும்.

சமஷ்டித் தீர்வுக்கான எந்தத் தேவையும் இலங்கையில் கிடையாது. ஏதாவது ஒரு சமஷ்டி மாதிரியை இந்த நாட்டுக்கு பொருத்துவது, அதனைப் பிரித்து விடுவதற்கு வழி வகுத்து விடும். அதனால் ஜே.வி.பி எப்பொழுதும் சமஷ்டியை ஒரு தீர்வாக ஆராயாது என்றும் ரில்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

(ச-5)

## மின்சாரப் பரிவர்த்தனை புரிந்துணர்வு முன்மொழிவு

(புதுடில்லி)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான மின்சாரப் பரிவர்த்தனை புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பான முன்மொழிவு இந்திய மக்களவையில் நேற்று முந்தினம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கைக்கு அமைய மேற்கொள்ளப்படவுள்ள திட்டத்தின் கீழ் ஆயிரம் மெகா வோட்ஸ் அளவிலான மின்சக்தி பரிமாற்றத்தை மேற் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலுக்கடியில் அமைக்கப்படவுள்ள மின்கம்பிகளின் ஊடாக உயர்வலு கொண்ட மின்சார வழங்கலை மேற்கொள்ளவிருப்பதாக இந்திய மின்சக்தி வள அமைச்சர் சுசில் குமார் சின்டே தெரிவித்துள்ளார்.

(ச-14)

## இலங்கைக்கு ஒப்பந்த கால அடிப்படையில் 2.6 பில்லியன் கடன் உதவி

### சர்வதேச நாணய நிதியம் இணக்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு 2.6 பில்லியன் டொலர் பெறுமதியான கடன் உதவி தொகையை ஒப்பந்தக் கால அடிப்படையில் வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்குவது குறித்த இறுதித் தீர்மானத்தை நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு அங்கீகரித்துள்ளது.

இந்நிதியத்தின் மூலம் கடந்த 37 வருட கால யுத்தத்தின் பின்னரான இலங்கையில் மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென சர்வதேச நாணய நிதியம் கோரியுள்ளது.

உலகப் பொருளாதார நெருக்கடியின் அதிர்வுகள் இலங்கையிலும் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் தகாட்சோய் கட்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் இந்த கடன் தொகையை சரியான வழியில் பயன்படுத்தி நன்மைகள் அடைய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல் இன்று ஞாயிற்றுக் கிழமை 8.30 மணிக்கு சமூக சேவை மற்றும் சமூக அமைச்சின் அலுவலகத்திற்கு முன் பாக நடைபெறவுள்ளதாக தொண்டர் ஆசிரி யர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## தொப்பிகல பிரதேசத்தில் ஒரு தொகுதி ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனைப் பிரதேசத்திலுள்ள காயனோடையில் விடுதலைப்புலிகளினால் மறைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 75 ஆயிரம் ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் மறைவிடமொன்றிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.


99 பெட்டிகளைக் கொண்ட இந்த துப்பாக்கி ரவைகளின் எண்ணிக்கை 74 ஆயிரத்து 250 என தெரிவிக்கும் பொலிஸ் தகவல்களின் படி பொலித்தீனில் உறையிடப்பட்டு மசகு பூசப்பட்டு பாதுகாப்பான முறையில் இவை புதைக்கப்பட்டிருந்தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் தொப்பிகல பிரதேசத்திலுள்ள கூளாவடியிலும் ஒரு தொகுதி ஆயுதங்களும் வெடிப்பொருட்களும் இப்படிக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

7கிலோ எடையுடைய கிளேமோர் குண்டுகள் -03 ,2 கிலோ எடையுடைய கிளேமோர் குண்டுகள் -2 ,ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் 22 ஆயிரத்து 500, மிதிவெடிகள் 103 , 5 கிலோ எடையுடைய அமுக்க வெடிகள் 2 மற்றும் வெடிக்க வைக்கும் கருவிகளும் உபகரணங்களும் இவற்றில் அடங்குவதாக பாதுகாப்பு தரப்பு கூறுகின்றது.

இதனைத்தவிர இதே பிரதேசத்திலுள்ள தரவையில் 120 எம்.எம்.மோட்டார் துப்பாக்கி ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ஓ-6)

# பற்றாக்குறையா? பகிராக்குறையா?



## பரமபிதா காட்டிய பாதை

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகுத்து உண்ணும் பழக்கம் உடையவனை பசி என்று கூறப்படும் தீய நோய் அணுகுவதில்லை.

மனிதன் உயிர் வாழ உணவு மிக அவசியம். இந்த உணவு ஒரு மனிதனின் மூன்று அடிப்படைத் தேவைகளில் முதன்மையானது. இறைவன் இந்த உலகைப் படைத்த போது, அதிலுள்ள அனைத்து இயற்கை வளங்களையும் மனிதன் பயன்படுத்தி ஆண்டு நடத்தவும் பல்கிப்பெருகவும் சொன்னார். இதோடு இன்னொன்றையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். பகிர்ந்து வாழுங்கள் என்பதையும் சொல்லாமல் சொன்னார்.

ஆம் , அகிலம் முழுவதும் பயன்பெறவே ஆண்டவன் அனைத்தையும் படைத்துக்கொடுத்தான். அப்படி என்றால் , இன்று மனிதரிடையே ஏற்றத்தாழ்வும் , பற்றாக்குறையும் பணக்காரன் , ஏழை என்ற பாகுபாடுகளும் எப்படி நுழைந்தன? இறைவன் செய்த குற்றமா? இல்லை , மனிதர்கள் செய்த குற்றமே. மேற்சொன்ன அனைத்துக் குறைபாடுகளும் இறைவனால் அல்ல , மாறாக சுயநலமிக்க விஷமிகளால் உண்டானவை.

இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு 5ஆயிரம் பேருக்கு உணவைப் பகிர்ந்தளிக்கின்றார். இந்தப் புதுமைச் செயலை உண்ணிப்பாக கவனிக்க வேண்டும்.

இயேசுவின் சீடர்களில் ஒருவர் , பேதுருவின் சகோதரர் அந்திரேயாவோ , தங்களுக்கு பசியாற ஐந்து வாற் கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன , ஆனால் இத்தனை பேருக்கும் எப்படி? என்று எதிர்கேள்வி தொடுக்கின்றார்.

ஆனால் இயேசு கணக்கும் பார்க்காமல் தனக்கும் பார்க்காமல் தந்தை இறைவன் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராய் , அந்த ஏழை மக்கள் மீது அக்கறையும் , கரிசனையும் கொண்டவராய் செயற்படுகின்றார். எப்படி? இந்த அப்பங்களையும் , மீன்களையும் பகிர்ந்து கொடுக்கின்றார்.

ஆம் பகிர்கின்றபோது நிறைவு பெறுகிறது. பதுக்குகின்றபோது குறைவு தெரிகின்றது. இன்னொன்றை நாம் இங்கு கவனிக்க வேண்டும் .இயேசுவுக்கு எப்போதும் ஏழைகள் மீது பரிவு அதிகம் அவர்கள் நிறைவு பெறவேண்டும் என்று துடித்தவர். எனவே தான் தனது மலைப்பொழிவில் முதல் பேற்றை ஏழைகளுக்குக் கொடுத்தார். ஆம் நாம் பேறு பெற்றவர்களாக வாழ வேண்டுமா? சபிக்கப்பட்டவர்களாக வாழ வேண்டுமா? பேறுபெற்றவர்களாக வாழ வேண்டும் என்றால் இருப்பதை இல்லாதவரோடு பகிர்ந்து வாழ்வோம். பகிராமல் பதுக்கி வாழ்ந்தால் இறைவனின் சாபத்தையே பெறுவோம்.

ஆம் உயிரோடு இருக்கும் போதே , இம் மண்ணுலகில் வாழும் போதே மக்களுக்கு பயன் உள்ளவர்களாக வாழ்வோம். சாகும் போது யாருக்கு என்ன இலாபம் ? எனவே பற்றாக்குறையல்ல, பகிராக்குறையே மானிட வாழ்வின் ஏற்றத்தாழ்வுகளுக்கு காரணம் என்பதை உணர்வோம் , செயற்படுவோம்.

ஜோன் றொபேர்ட்

# ஈரானில் இடம்பெற்ற விமான விபத்தில் 17 பயணிகள் பலி; 23 பேர் காயம்

(டெக்ரான்)

ஈரானில் இடம்பெற்ற விமான விபத்தில் 17 பயணிகள் பலியானார்கள். 23 பேர் காயம் அடைந்தனர்.

ஈரான் தலைநகர் டெக்ரானில் இருந்து மாஷாத் வந்த பயணிகள் விமானம் ஒன்று மாஷாத் விமான நிலையத்தில் தரை இறங்கியது. அப்போது ஓடு பாதையின் நடுப்பகுதியில் இறங்கியதால், குறைந்த தூரமே உள்ள ஓடுபாதையில் வேகமாகச் சென்ற விமானம் சுற்றுச்சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

மோதிய வேகத்தில் விமானத்தின் முன் பகுதி சேதம் அடைந்து தீப்பிடித்தது. அந்த விமானத்தில் 150 பேர் பயணம் செய்தனர்.

அவர்களில் முன் பகுதியில் அமர்ந்திருந்த 17 பேர் விபத்தில் சிக்கிப் பலியாணார் கள். 23 பேர் படு காயம் அடைந்தனர். விபத்து நடந்ததும் தீயணைப்புப் படை யினர் விரைவில் சென்று தீயை அணைத்தனர். விமானத்தில் இருந்த மற்றப் பயணிகள் மீட்கப்பட்டு பாதுகாப்புடன் வெளியே அழைத்துச் செல் லப்பட்டனர்.



கடந்த 15 ஆம் திகதி ஈரான் விமானம் நொறுங்கி விழுந்ததில் 168 பயணிகள் பலியனார்கள்.

அடுத்த 10 நாட்களுக்குள் இரண் டாவது விமான விபத்தல் 17 பேர் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## ஐக்கிய அரபு எமிரேட்டில்

# குடியிருப்பு விசா பெற கைரேகை பதிப்பது கட்டாயம்

(துபாய்)

ஐக்கிய அரபு எமிரேட்டில், குடியிருப்பு விசா கேட்டு விண்ணப்பம் செய்பவர்கள், தங்கள் பெருவிரல் ரேகையை பதிக்க வேண்டும் என்ற விதிமுறை, அடுத்த மாதம் முதல் அமுலுக்கு வருகிறது.

குற்றப் பின்னணி உடையவர்களை அடையாளம் கண்டறிந்து, பொலிசில் ஒப்படைப்பதற்காக, இந்த நடவடிக்கை அறிமுகப்படுத்தப்படுவதாக உயர் அதிகாரி அல் மினாலி தெரிவித்தார்.

விசாவைப் புதுப்பிக்க வருபவர்களும் பெருவிரல் ரேகை பதிக்க வேண்டும் என்று அவர் கூறினார். இதற்குப் பலர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## தென்னாபிரிக்காவில்

# வறுமைக்கு எதிரான வன்முறை போராட்டங்கள்

## வாக்குறுதிகளை அளித்து பதவிக்கு வந்தவருக்கு சவால்

வறிய வாழ்க்கை நிலைமைகளுக்கு எதிரான வன்செயல் போராட்டங்கள் தென்னாபிரிக்காவில் பரவி வருகின்றன. ஒருவாரமாக நடந்த மோதல்களில் இது வரை நூற்றுக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறுதியாக நடந்த சம்பவங்களில், ஜொகன்னஸ்பேர்க், வெஸ்டர்ன் கேப் மற்றும் எம்புமலாங்கா பிராந்தியத்தின் வடகிழக்குப் பகுதி ஆகியவற்றில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

அடிப்படை தேவைகளை விநியோகிப்பதில் அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது என்ற நீண்டகால கவலைகளுக்கு பொருளாதார சுருக்கமும் மற்றும் வேலையிழப்பும் தூபமிட்டுவிட்டன என்று ஜொகன்னஸ்பேர்க்குக்கான செய்தியாளர் தெரிவித்துள்ளர்.

நகரியங்களில் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதாக வாக்குறுதிகளை அளித்து கடந்த ஏப்ரலில் பதவிக்கு வந்த அதிபர் ஜூமாவுக்கு இது ஒரு பெரிய சவாலாகும். (ஓ-6)




# டுபாய் அரசின் புதிய அறிவிப்பால் பலர் வீடு இழக்கும் அபாயம்

ஒரே வீட்டை பலர் பகிர்ந்து கொள்ளக் கூடாது என்ற புதிய உத்தரவு ஒன்றை டுபாய் அரசு பிறப்பித்துள்ளது. இதனால் அங்கு வாழும் வெளிநாட்டவர்கள் பலர் வீடுகளை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

டுபாயில், ஒரே வீட்டில் ஒரு குடும்பத்திற்கும் அதிகமானவர்களோ அல்லது திருமணமாகாத இளைஞர்கள் பலரோ சேர்ந்து தங்கலாம் என, அந்நாட்டு அரசு முன்னர் அனுமதித்திருந்தது.

எனினும் தற்போது அந்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதன்படி ஒரு வீட்டில் ஒரு குடும்பத்திற்கும் மேல் யாரும் தங்கக் கூடாது என்ற புதிய அறிவிப்பு வெளியாகியுள்ளது.

டுபாயில், விலா என அழைக்கப்படும் வீடுகளின் வாடகை அளவுக்கு அதிகமாக உள்ளது. அதனால், ஏராளமான வெளிநாட்டுக் குடும்பங்கள் மற்றும் திருமணமாகாத இளைஞர்கள் பலர் ஒரே வீட்டில் வசிக்கின்றனர்.

இப்படி சேர்த்து வசிப்பவர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டு, ஒரு வீட்டில் ஒரு குடும்பம் மட்டுமே வசிக்க வேண்டும். இதை மீறும் விலா உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என, கடந்தாண்டு மத்தியில் அந்நாட்டு அரசு அறிவித்தது.

இந்த விதிமுறை, அடுத்த மாதம் முதல் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கு கால நீட்டிப்போ அல்லது விதிவிலக்கோ கிடையாது என டுபாய் நகராட்சி அதிகாரி உசேன் நாசர் லூட்டா கூறியுள்ளார். (6)

# ஷங்காயில் பெரிய குடும்பங்களை ஊக்குவிக்க சீனா முடிவு

(ஷங்காய்)

சீனாவில் நீண்டகாலமாக அமுலில் இருந்துவரும் அரசாங்க கொள்கையொன்றை பின்னோக்கித் தள்ளும் விதமாக, அந்நாட்டின் மிகப் பெரிய நகரமான ஷங்காய், தமது மக்கள் பெரிய குடும்பங்களை கொண்டிருப்பதை ஊக்குவிக்க தீர்மானித்துள்ளது.

1979 ஆம்ஆண்டில் ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் சீன அதிகாரிகள் பெரிய குடும்பங்களை ஆர்வத்துடன் ஊக்குவிக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய ஆளணிப் பற்றாக்குறையைத் தீர்க்கும் பொருட்டு, ஒரு குழந்தை கொண்ட குடும்பங்களில் இருந்து வந்த தம்பதியர் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென நகரத்தின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்ட ஆணையத்தின் தலைமை அதிகாரி கூறுகிறார்.

2020 ஆம் ஆண்டில் ஷங்காயின் சனத்தொகையில் மூன்றிலொரு பங்காக 60 வயதைக் கடந்தவர்களே இருப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6)

# இந்தோனேஷிய அதிபர் தேர்தலில் பாம்பாங் யுதோயோனோ வெற்றி

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் அதிபர் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோவும், முன்னாள் ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்ரி, துணை ஜனாதிபதி ஜுசுப் கல்லா ஆகியோர் போட்டியிட்டனர்.

வாக்குப் பதிவு கடந்த ஏப்ரல் மாதம் நடந்தது. அப்போது தேர்தலில் முறைகேடு நடந்ததாக மேகவதி தரப்பில் புகார் கூறப்பட்டது. இதுகுறித்து சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் அவர் கூறினர். எனவே, வாக்கு எண்ணும் பணி தாமத மானது. தேர்தல் ஆணையகம் விசாரணை நடத்தியது.

தேர்தலில் முறைகேடு நடைபெறவில்லை என்று உறுதியானதைத் தொடர்ந்து வாக்குகள் எண்ணும் பணி நடைபெற்றது. இதில் அதிபர் யுதோயோனோ அணி 60.8 சதவீதம்



ஓட்டுகள் பெற்று அமோக வெற்றி பெற்றது.

மேகவதி அணிக்கு 26.8 சதவீதம் வாக்குகளும், துணை ஜனாதிபதி ஜுசுப் கல்லாவுக்கு 12.4 சதவீதம் வாக்குகளும் கிடைத்தன. இதைத் தொடர்ந்து தேர்தலில் யுதோயோனா வெற்றிபெற்றதாக தேர்தல் ஆணையகத்தின் இணையத்தளத்தில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

# பெல்ஜியத்தில் ஹெலிகொப்டரில் ஏறித் தப்பிய சிறைக் கைதிகள்

## சினிமாவை மிஞ்சும் வகையில் நடந்த சம்பவம்

(புரூசெல்ஸ்)

பெல்ஜியம் நாட்டில் புருக்ஸ் நகரில் பெரிய சிறைச்சாலை உள்ளது. அந்த சிறையில் பெல்ஜியம் நாட்டின் மிகப் பயங்கர கிரிமினல் குற்றவாளியான அஸ்ரப் ஷிக்காகி (வயது 26) உட்பட பலர் அடைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த வியாழக்கிழமை அஸ்ரப் கூட்டாளி ஒருவன் திடீரென ஒரு ஹெலிகொப்டரை கடத்தி வந்தான். விமானியை மிரட்டி அந்த ஹெலிகொப்டரை சிறைக்குள் தரை இறக்கச் செய்தான்.

அஸ்ரப் ஏற்கனவே சிறைச்சாலையில் தயாராக இருந்தான். ஏற்கனவே திட்டமிட்டபடி அவன் மின்னல் வேகத்தில் ஓடிச்சென்று ஹெலிகொப்டரில் ஏறினான்.

கண் இமைக்கும் நேரத்துக்குள் அந்த ஹெலிகொப்டர் சிறைக்குள் இருந்து உயரே கிளம்பி சென்று விட்டது. அஸ்ரப்புடன் மேலும் 2 கைதிகள் தப்பிச் சென்றுவிட்டனர்.

சுமார் 20 கிலோ மீற்றர் தொலைவில் மீண்டும் ஹெலிகொப்டரை தரை இறக்கி அஸ்ரப்பும் அவன் கூட்டாளிகளும் ஒரு மெர்சிடஸ் காரை திருடி அதில் ஏறித்தப்பிச் சென்று விட்டனர்.

அவர்கள் எங்கு தப்பிச் சென்றனர் என்பதை பெல்ஜியம் பொலிஸாரால் இது வரை கண்டுபிடிக்க இயலவில்லை. பெல்ஜியத்தில் சினிமாவை மிஞ்சும் வகையில் நடந்த இந்த சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (6)

# பின்லேடனின் மகன் கொல்லப்பட்டதாக கூறப்படும் செய்திக்கு தலிபான்கள் மறுப்பு

(இஸ்லாமபாத்)

அமெிக்க ஆளில்லா விமாணம் மூலம் நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் பின்லேடன் மகன் சாத் பின்லேடன் கொல்லப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதை தலிபான்கள் மறுத்துள்ளனர். இதுபற்றி அவர்கள் கூறியதாவது,

கடந்த 3 ஆண்டுகளில் அல்கொய்தா மூத்த தலைவர்கள் யாரும் அமெரிக்க தாக்குதலில் பலியாகவில்லை. அல்கொய்தா தலைவர்கள் அனைவரும் பதுங்கு குழிகளிலோ, குகைளிலோ தான் வசிப்பார்கள். எந்தத் தாக்குதலிலும் பின்லேடனோ, அவரது குடும்பத்தினரோ பலியாகவில்லை. சாத் பின்லேடன் ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவுக்கு எதிராக போரிட்டு வருகிறார்.

சில நாட் களுக்கு முன்பு வரை எங்கள நண்பர்கள் சந்தித்துள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

இதேபோல், தலிபான் தலைவர் மவுலானா பஸ்லுல்லா காயம் அடைந்ததாகக் கூறப்படுவதையும் அவர்கள் மறுத்துள்ளனர். (6)

# டெஸ்டிலிருந்து ஓய்வு பெற்ற வாஸுக்கு ஒருநாள் போட்டி அணியில் இடமில்லை

பாகிஸ்தானுடனான ஒருநாள் தொடருக்கான இலங்கை அணியில் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற அனுபவ வேகப்பந்து வீச்சாளர் சமிந்தவாஸுக்கு இடம் கிடைக்கவில்லை.

எனினும் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் திலான் சமரவீர மற்றும் சுழற்பந்து வீச்சாளர் மலிங்க பண்டார ஆகியோருக்கு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஒருநாள் அணியில் இடம் கிடைத்தது.

அத்துடன் காயத்தினால் அவதிப்பட்டுவந்த முத்தையா முரளிதரன் மற்றும் லசித் மலிங்க ஆகியோரும் 15 பேர் கொண்ட அணியில் இணைக்கப்பட்டனர்.

இதில் காயத்துக்கு உள்ளாகியுள்ள அதிரடி ஆட்டக்காரர் டி.எம். டில்சான் சேர்க்கப்படவில்லை. பதிலாக ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக உபுல் தரங்க மீண்டும் இணைக்கப்பட்டுள்ளார்.

எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நேற்று முன்தினம் முடிபடைந்த பாகிஸ்தானுடனான 3ஆவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியுடன் டெஸ்ட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்ற 35 வயதான சமிந்த வாஸ் எதிர்வரும் 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடர்வரை இலங்கை அணிக்காக ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் விளையாட திட்டமிட்டுள்ளார்.

எனினும் அவருக்கு தொடர்ந்து இலங்கை ஒருநாள் அணியில் இடம் மறுக்கப்பட்டு வருகிறது.

வாஸ் எஸ்.எஸ்.சி. டெஸ்டில் ஒரு விக்கெட்டை மாத்திரமே வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



இதில் 32 வயதான திலான் சமரவீர இலங்கை ஒருநாள் அணியில் இணைக்கப்படுவது 4 ஆண்டுகளில் இதுவே முதல்முறையாகும்.

அவர் கடைசியாக 2005ஆம் ஆண்டு இலங்கை அணிக்காக ஒருநாள் போட்டியில் விளையாடினார். அதேபோன்று சுழற்பந்து வீச்சாளர் மலிங்க பண்டார அணிக்கு திரும்புவது 2 ஆண்டுகளின் பின்னர் ஆகும்.

இதுதவிர ஒருநாள் தொடருக்காக அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை அணியில் சகலதுறை ஆட்டக்காரர் பர்வீஸ் மஹ்ரூபிற்கு இடம் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளை கொண்ட ஒருநாள் தொடர் தம்புள்ளையில் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அணி விபரம்;

குமார் சங்கக்கார (அணித்தலைவர்/வி.கா), முத்தையா முரளிதரன், சனத் ஜெயசூரியா, மஹேல ஜெயவர்த்தனா, திலான் சமரவீர, சாமர கபுகெதர, அன்ஜலோ மத்யூஸ், நுவான் குலசேகர, லசித் மலிங்க, அஜந்த மெண்டிஸ், திலின கண்டம்பி, மலிங்கபண்டார, திலான்துஷார, இஸூரு உதான, உபுல் தரங்க.

# ரொனால்டோவை இழந்த மான்செஸ்டர்

உலகின் நம்பர்-1 கால்பந்து வீரராக வலம் வருகிறார் போர்த்துகலின் கிறிஸ்டியானோரொனால்டோ. இவரை அணியில் சேர்த்துக் கொள்ள உலகின் முன்னணி கால்பந்து கழகங்கள்போட்டி போட்டுக் கொண்டுள்ளன.

இதில் இம் முறை வெற்றி பெற்றிருக்கிறது ரியல் மாட்ரிட் கழக அணி. ரொனால்டோவை ஆறு ஆண்டுகளுக்கு சுமார் 650 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்துள்ளது ரியல் மாட்ரிட் கழகம். உலகில் எந்த கால்பந்து வீரரும் இந்த தொகைக்கு இதுவரை ஒப்பந்தம் செய்யப்பட்டதில்லை.


ரியல்மாட்ரிட் கழக அணியில் ரொனால்டோ 9ஆம் எண் ஜெர்சியுடன் களமிறங்கவுள்ளார். இந்த ஜெர்சியை மாட்ரிட் அணியின் முன்னாள் ஜாம்பவான் அல்பிரடோடிஸ்டெபனோ, சான்டியாகோ பெர்னபேஸ்டேடியத்தில் ரொனால்டோவிடம் வழங்கினார்.

ஒரு விழா போல நடந்த இந் நிகழ்சியில், சுமார் 80 ஆயிரம் ரசிகர்கள் ஸ்ரேடியத்தில் கூடினர். இதற்கு முன் முன்னாள் ஆர்ஜென்டினா வீரர் மரடோனா கடந்த 1984ஆம் ஆண்டு பார்சிலோனா கழக அணியிலிருந்து நபோலி கழகத்துக்கு மாறிய போது இத்தாலியில் 75 ஆயிரம் ரசிகர்கள் கூடினர். ரொனால்டோ இச்சாதனையை முறியடித்துவிட்டார்.

**மான்செஸ்டர் கவலை**

ரொனால்டோ ரியல் மாட்ரிட் கழகத்துக்கு சென்று விட்டதால் இதுவரை அவர் விளையாடி வந்த மான்செஸ்டர் யுனைடெட் அணி கவலை அடைந்துள்ளது. இது குறித்து மான்செஸ்டர் யுனைடெட் அணியின் முகாமையாளர் அலெக்ஸ்பெர்குசன் கூறியதாவது;

ரொனால்டோ எங்கள் அணியிலிருந்து விலகியது மிகப்பெரிய



பின்னடைவு என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. லியோனல் மெஸ்சி, காகா ஆகியோரை விட ரொனால்டோ உலகின் மிகச் சிறந்த வீரர். அவர் உலகின் எந்த கழக அணிக்காக விளையாடினாலும் மீண்டும் மான்செஸ்டர் அணிக்கு திரும்புவார் என நம்புகிறேன்.

அவருக்கு தற்போது 24 வயது தான் ஆகிறது. ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள 6 ஆண்டுகளில் தனது முடிபை அவர் மாற்றிக்கொள்ள வாய்ப்புள்ளது.

அவர் இல்லாத நிலையில் மான்செஸ்டர் யுனை டெட் அணி தனது ஆட்டத்தின் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ரொனால் டோ இடத்துக்கு நல்ல அனுபவம் வாய்ந்த வீரர்களை தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. யாரைத் தேர்வு செய்தாலும் இன்னொரு ரொனால்டோ மான்செஸ்டர் கழகத்துக்கு கிடைக்க மாட்டார். இவ்வாறு பெர்குசன் தெரிவித்தார்.

# சம்பியன்ஸ் லீக் இருபது-20 ஒக்டோபரில் இந்தியாவில் நடக்கும்

(மும்பை)

சம்பியன்ஸ் லீக் இருபது-20 போட்டிகள் பெங்களூர், டில்லி, ஐதராபாத் ஆகிய இடங்களில் நடக்கவுள்ளன.

இந்தியா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட 7 நாடு களில் உள்ள உள்ளூர் இருபது-20 சம்பியன் அணிகள் மோதும் முதலாவது சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் இந்தியாவில் எதிர்வரும் ஒக்டோபர் 8ஆம் திகதி முதல் 23 ஆம் திகதி வரை நடக்கிறது.

இதில் 12 அணிகள் 4 பிரிவுகளாக லீக் சுற்றில் மோதும். ஒவ்வொரு பிரிவிலும் 2 இடங்களை பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றுக்கு முன்னேறும்.

இதில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதியில் விளையாடும். இத் தொடருக்கான 12 அணிகள் வரும் 30ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளன.

இத் தொடரில் மொத்தம் அரையிறுதி, இறுதிபோட்டி உட்பட 23 போட்டிகள் நடக்கவுள்ளன. இப் போட்டிகள் பெங்களூர், ஐதரா பாத் மற்றும் டில்லியிலுள்ள மைதானங்களில் நடக்கவுள்ளன.

இந்தியாசார்பில் 2009-ஐ.பி.எல். சம்பின்ஸ் டெக்கான் சார்ஜர்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ், டில்லி டேர்டேவில்ஸ் அணிகள் பங்கேற்கின்றன.

அவுஸ்திரேலியா சார்பில் விக்டோரியன் புஷ்ரேஞ்சர்ஸ், நியூசவுத் வேல்ஸ் புளூஸ் அணிகளும், தென்னாபிரிக்கா சார்பில் கேப் கோப்ரா, டைமண்ட் ஈகல்ஸ் அணிகளும், நியூசிலாந்து சார்பில் ஒடாகோ வோல்ட்ஸ், மேற்கிந்தியத்தீவுகள் சார்பில் டிரினிடாட் மற்றும் டுபாகோ, இலங்கை சார்பில் வயம்பா அணிகளும் பங்கேற்கின்றன.

இங்கிலாந்து சார்பில் விளையாடும் அணி எதிர்வரும் ஆகஸ்ட் 25 ஆம் திகதி நிர்ணயிக்கப்படும்.




# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம் 100





## வீறு கொண்டெழுந்தார்

1998ஆம் ஆண்டு ஜனவரியில் சிம்பாவே அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டு 2 டெஸ்ட், 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் முதலாவது டெஸ்ட் 1998 ஜனவரி 7ஆம் திகதி முரளிதரனின் சொந்த மைதானம் என அழைக்கப்படும் கண்டி அஸ்கிரிய மைதானத்தில் ஆரம்பமானது.

அன்டி பிளவர், கிராண்ட் பிளவர், காமபில் றென்னி என முன்னணி வீரர்கள் பலம் பொருந்திய சிம்பாவே அணியை இலங்கை அணி சந்தித்தது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 469 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்களையிழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் முரளிதரன் 19 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 17 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி முரளிதரனின் துல்லியமான சுழலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 140 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்து வீச்சில் முரளிதரன் 29 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 23 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து கிராண்ட் பிளவர் (04), விஷாட் (03), பி.ரஸ்ராண்ங் (35), ஸ்ரீட்க் (05), பி.சிஸ்ரானங் (02) ஆகியோரை வெளியேற்றி 5 விக்கெட்டுக்களை சாய்த்து அசத்தினார்.

இதன் மூலம் முதலாவது இன்னிங்ஸில் 329 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலை வகித்த சிம்பாவே அணி பொலோன் முறையில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடி முரளிதரனின் சுழலில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 338 ஓட்டங்களை எடுத்தது.

இதில் துல்லியமாக பந்து வீசிய முரளிதரன் 42.5 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 94 ஓட்டங்களை கொடுத்து றென்னி (24), குட்வின் (70), விட்டல் (14), அன்டிபிளவர் (67), விஷாட் (0), பி.ஏ.ஸ்ராண்ங் (33), குக்கில் (0) ஆகியோரை ஆட்டமிழப்பு செய்து 7 விக்கெட்டுக்களை பதம் பார்த்து புதிய வரலாறு படைத்தார்.

**பாலா**

(பயணிக்கும்)

குறைந்த விலையில் நிறைந்த தரத்தில் அனைத்து மங்கள நிகழ்வுகளையும் படம்பிடித்திட
எங்களை அழையுங்கள்
0771693448
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
யாழ்ப்பாணம், மானிப்பாய், மல்லாகம், நெல்லியடி.
(C-2904)

# இலங்கை மனித உரிமை...

கூட்டம் நடத்தப்பட்டது.

படுகொலைகள் மற்றும் இன அழிப்பு தொடர்பிலான கற்கை நிலையம், மனித உரிமைகள் நிலையம், இன அழிப்பை தடுக்கும் வலையமைப்பு- மினசோட்டா ஆகிய அமைப்புக்கள் இந்தக் கூட்டத்திற்கு அனுசரணை வழங்கியிருந்தன.

எனினும் பல்கலைக்கழகம் இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்டத்தை எதிர்த்து பல தொலைபேசி அழைப்புக்களும் மின்னஞ்சல்களும் வந்ததாக ஏற்பாட்டாளர்கள் கூறினர்.

கூட்டத்திற்கு தலைமைதாங்கி உரையாற்றிய படுகொலைகள் மற்றும் இன அழிப்பு தொடர்பிலான கற்கை நிலையத்தின் இடைக்காலத் தலைவர் டாக்டர் எலன் கென்னடி, இலங்கையில் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 4 இலட்சத்து 25 ஆயிரம் என்று தெரிவித்தார்.

வன்னியில் படையினரால் தமிழ் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள முகாம்களில் மக்களின் சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுவது, தகவல்களைப் பெறுவதில் உள்ள சிக்கல்கள், பெண்களுக்கு எதிரான வன்முறை என்பனபற்றியும் அவர் உரையாற்றினார்.

தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பில் ஈழத் தமிழர்கள் பலர் நிகழ்வில் உரையாற்றினர். இறுதியில் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றில் இலங்கை அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு அமெரிக்காவும் ஐக்கிய நாடுகள் சபையும் உதவ வேண்டும் என்ற கோரிக்கை அடங்கிய பல மனுக்களில் கலந்து கொண்டோர் கையெழுத்திட்டனர்.

அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும் அமெரிக்க காங்கிரஸ் சபை உறுப்பினர் கெய்த் எலிசன் ஆகியோருக்கும் அந்த மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் எந்த வழியிலாவது அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களைத் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரிவித்து, இலங்கையில் நடைபெறும் அட்டூழியங்கள் தொடர்பில் அவர்களை விழிப்புடன் வைத்திருக்க வேண்டும் என்று டாக்டர் எலன் கென்னடி கேட்டுக் கொண்டார்.

(ச-5)

கெட்டிமேளம் திருமண சேவை
உங்களது வயது தகுதிகளுக்கேற்ப மணமக்களை
தெரிவு செய்ய ஒரே இடம்
மூர்த்தி டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(C-2904)

# ஒன்றுவிட்ட ஒரு நாளுக்கு...

ஊடகவியலாளர் மாநாட்டிலேயே மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே இதனைத்தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து ஏ-9 வீதியூடாக கொழும்பு செல்லும் பஸ் சேவைக்கு செல்வோரை யாழில் எவ்வாறு ஒழுங்கமைப்பது,

கொழும்பிலிருந்து ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கு வருவோரை கொழும்பில் எவ்வாறு தெரிவு செய்வது என்பது தொடர்பில் ஒரு ஒழுங்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இது தொடர்பில் ஆராய்வதற்கு போக்குவரத்து அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொள்ளும் விசேட மாநாடு கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இம் மாநாட்டைத் தொடர்ந்து அடுத்தவாரம் முதல் ஒன்றுவிட்ட ஒரு நாளைக்கு ஏ-9 பாதையூடாக பஸ் சேவை சீராக நடைபெறும்.

### அமைச்சர் டக்ளஸின் துரித நடவடிக்கை

யாழ்.குடாநாட்டில் மீன்பிடி, விவசாயம், போக்குவரத்து ஆகிய துறைகளில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் வசதிக்குறைவு உள்ளமை, பொருட்களின் விலைகள் கூடுதலாக உள்ளமை தொடர்பிலும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதிக்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

இதனையடுத்து ஜனாதிபதியும் வடக்கின் செயலணித் தலைவர் பசில் ராஜபக்ஷவும் என்னை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு நான் வந்தவுடன் யாழ். வர்த்தகர்கள் எதிர்கொண்ட போக்குவரத்துப் பிரச்சினையை உடனடியாக நீக்கி வைத்தேன். கொழும்பிலிருந்து ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்திற்கு லொறிகளுக்கான கட்டணமாக ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் அறவிடப்பட்டது.

இதனை உடனடியாக 80 ஆயிரம் ரூபாயாக குறைத்ததுடன் 30 ஆயிரம் ரூபாய் வரை எடுக்கப்பட்ட சுமை கூலி 8 ஆயிரம் ரூபாயாக குறைக்கப்பட்டது.

அத்துடன் ஏ-9 வீதியூடாக தினமும் 40 லொறிகளில் பொருட்கள் எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது. இதனால் தற்போது யாழ்.வர்த்தகர்கள் எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் கொழும்பு விலையில் பொருட்களை விற்பனை செய்ய உறுதியளித்துள்ளனர்.

அத்துடன் வர்த்தக நுகர்வோர் அமைச்சின் கீழான நுகர்வோர் பாதுகாப்பு சபை நிறுவப்பட்டு கூடுதலான விலையில் பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### மீண்டும் சதோச

மேலும் நாளை மறுதினம் யாழ். வின்சர் தியேட்டரில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சதோச) ஆரம்பித்து வைக்கப்பட்டு யாழ்.மக்களுக்கும் வர்த்தகர்களுக்கும் குறைந்த விலையில் பொருட்கள் வழங்கப்படும்.

### போக்குவரத்துப் பிரச்சினை

யாழ்.குடாநாட்டில் நீண்டகாலம் போக்குவரத்துப் பிரச்சினை காணப்பட்டது. வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் பல பழுதடைந்து காணப்பட்டன. இதனால் போக்குவரத்து அமைச்சர் உடனடியாக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் 50 பஸ்களுக்கான டயர்கள், பற்றிகள் வழங்கி வைத்தார். அத்துடன் 4 புதிய பஸ்களும் வழங்கப்பட்டது. இதனால் யாழ்.சாலையில் மேலதிகமாக 54 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

### மீன்பிடிப் பிரச்சினை

வடக்கின் வசந்தம் செயலணித் தலைவர் பசில் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து 24 மணிநேரம் குடாநாட்டுக் கடலில் மீன் பிடியில் ஈடுபட அனுமதி வழங்கினார்.

அத்துடன் பின்னர் யாழிற்கு வருகை தந்த மீன் பிடி நீரியல்வள அமைச்சர், யாழ்.கடலுணவுகளை தென்னிலங்கைக்கு அனுப்புவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

### பயணப்பாதுகாப்பு அனுமதி

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டத்திற்கு செல்லும் மக்கள் படையினரின் பாதுகாப்பு பயண அனுமதியை எடுக்கவேண்டும். இவ் அனுமதியை பெற்றுக்கொள்ள மாதக்கணக்கில் காலதாமதம் ஏற்படுவதாக மக்கள் என்னிடம் முறையிட்டனர்.

இதனையடுத்து யாழ்.இராணுவத்தினரிடம் ஆலோசிக்கப்பட்டு இரு வார காலத்தில் பயணப் பாதுகாப்பு அனுமதியை பெற்றுக்.கொள்வதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன்.

எனவே இரண்டு மாத காலத்திற்குள் இவ்வளவு வேலைத்திட்டங்களை மேற்கொண்ட நாங்கள் இன்னும் குறுகிய காலத்தில் யாழ்.மக்களுக்கு எதுவித தடையுமின்றி சுதந்திரமான வாழ்க்கையை ஏற்படுத்த முடியும்.

இதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால் மட்டுமே செய்ய முடியும்.

எனவே யாழ். மாநகர சபை ஆட்சியையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு யாழ்.நகர மக்கள் வழங்கவேண்டும் அதனூடாகவே மேலும் அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக மேற்கொள்ள முடியும் என்றார்.

(ச-5)

அதிரடி சலுகை !!!
♦ எம்மிடம் Mobitel SIM card ஒன்றை பெற்றுக் கொள்வதன் மூலம் பின்வரும் சலுகைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
♦ SIM card உங்கள் அடையாள அட்டை இலக்கத்திற்கே பதிவு செய்யப்பட்டு பொருத்தப்படும்.
♦ இரண்டு SIM card பாவிக்கக்கூடிய ஒரு கையடக்க தொலைபேசி அதிர்ஷ்ட அன்பளிப்பாக வழங்கப்படும்.
♦ இச் சலுகைகள் ஜூலை 9 முதல் ஆகஸ்ட் 28 வரை கையிருப்பு உள்ளவரை மட்டுமே. SIM card 250/= மட்டுமே!!!
சங்கீதா ஏஜன்ட்
இல.412, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
மத்திய பஸ் நிலையம் முன்பாக
(HNB அருகாமை)
(C-2908)

# அடுத்த...

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா எதிர்வரும் முதலாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார். அத்துடன் கல்வித்துறை சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்க கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் விவசாயத்துறை சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்வதற்கு விவசாயத்துறை அமைச்சர் குமார் நாணயக்காரவும் எதிர்வரும் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றனர் என்றார்.

# குற்றச் செயல்களை...

யாழ்.மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பது தொடர்பான விசேட கூட்டம் மின்சக்தி அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தலைமையில் நேற்று யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் தயானந்த பண்டார, யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரோஷான் பெர்ணாண்டோ, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், யாழ்.நகரத் தளபதி கேணல் கேமந்த குலதுங்கா மற்றும் இராணுவத்தினர், பொலிஸார், யாழ்.திணைக்களத் தலைவர்கள், வர்த்தகர்கள், கிராம சேவையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இம் மாநாட்டில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தமிழில் உரையாற்றுகையில்,

நாட்டில் யுத்தம் முடிந்தவுடன் சகல அமைச்சர்களுக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விசேட உத்தரவிட்டார். அதில் வடக்கு மாகாணத்தை விரைவில் அபிவிருத்தி செய்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை விரைவில் புனர்வாழ்வு அளிக்க வேண்டும்,

நாட்டின் மற்றைய மாவட்டங்களிலுள்ளவாறு சிவில் பாதுகாப்பு குழுவை யாழ்.மாவட்டத்தில் அமைக்க வேண்டும். இதனையடுத்து தற்போது யாழ்.குடாநாட்டில் மாவட்ட, பிரதேச மற்றும் கிராம மட்டங்களில் சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளேன். ஒரு வருடத்திற்கு முன் கொழும்பில் இடம் பெற்ற வன்செயல்களையும் பயங்கரவாதத் தாக்குதல்களையும் சிவில் பாதுகாப்புக் குழுக்களை அமைத்தே கட்டுப்படுத்த முடிந்தது.

அவ்வாறு இப்போது யாழ்.குடாநாட்டிலும் இவ்வாறு சிவில் பாதுகாப்பு குழுக்களை அமைத்து பொலிஸாருக்கும் மக்களுக்குமிடையே உள்ள விரிசலை நீக்கி ஒன்றிணைந்து செயற்படும் நிலையை உருவாக்க முடியும்.

இக்குழுக்கள் அமைக்கப்படுவதனூடாக வன்செயல்களை மட்டுமல்ல, கிராம மட்டங்களிலிருந்து களவு, கசிப்பு உற்பத்தி, சமூக சீரழிவுகள் மற்றும் குற்றச் செயல்களை இல்லாதொழிக்க முடியும்.

இக் குழுக்கள் அமைக்கப்படுவதனூடாக மக்கள் வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட அனைத்து பொலிஸ் அதிகாரிகளுடனும் தொடர்பை ஏற்படுத்த முடியும்.

### மாவட்ட மட்ட சிவில் பாதுகாப்புக் குழு

மாவட்ட மட்டத்திலான குழுவுக்கு யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைவராகவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் செயலாளராகவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் உட்பட அதிகாரிகள் அடங்குவர்.

இக்குழு பிரதேச, கிராம மட்டக் குழுக்களின் செயற்பாடுகளை கண்காணிப்பதுடன் அக்குழுக்களால் மேற்கொள்ள முடியாத நடவடிக்கையை உடனடியாக தீர்த்து வைக்கும். இக் குழு ஒருமாத காலத்திற்குள் அமைக்கப்படும்.

### பிரதேச மட்டக் குழு

மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைவராகவும் பிரதேச செயலர் அல்லது உதவி அரசாங்க அதிபர் செயலாளராகவும் பிரதேச சபை, திணைக்களத் தலைவர்கள், வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி சங்க உறுப்பினர்கள் இதில் அடங்குவர். இக் குழு கிராம மட்டத்திலிருந்து வரும் முறைப்பாடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுத்தல் அல்லது மாவட்ட மட்ட குழுவுக்கு அறியப் படுத்துதல் போன்ற பணியில் ஈடுபடும். இக் குழுவும் ஒரு மாத காலத்தில் அமைக்கப்படும்.

### கிராம மட்டக் குழு

ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் உள்ள சகல கிராம சேவை பிரிவுகளிலும் கிராம மட்ட சிவில் பாதுகாப்புக்கு அமைக்கப்படும். இக் குழுவில் பொலிஸ் அதிகாரி ஒருவர் தலைவராகவும் கிராம சேவையாளர் செயலாளராகவும் பாடசாலை அதிபர்கள், மதகுருமார்கள், ஆசிரியர்கள் மற்றும் பத்து இளைஞர்களும் அடங்குவர். இவ்வாறு தெரிவு செய்யப்படும் பத்து இளைஞர்களுக்கும் அடையாள அட்டை தொப்பி மேற் சட்டை என்பன பிரத்தியேகமாக வழங்கப்படும்.

இவ் இளைஞர்கள் கிராம மட்டத்தில் நடைபெறும் வன்செயல்கள், கசிப்பு உற்பத்தி, களவு, சமூகசீரழிவுகள் குற்றச் செயல்கள் தொடர்பில் தேடி அறிந்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் உட்பட பொலிஸாருக்கு அறியப்படுத்துவர்.

அதற்கு உடனடியாக பொலிஸார் நடவடிக்கை எடுப்பர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பத்து இளைஞர்களில் சிறப்பாகச் செயற்படுபவர்களுக்கு பொலிஸ் சேவையில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

அத்துடன் இக் குழுக்களில் அரச ஊழியர்கள் ஈடுபடுவதற்காக சகல அமைச்சுகளில் இருந்தும் விசேட சுற்று நிருபம் விரைவில் வெளியிடப்படும். இக் கிராம மட்டக் குழு மூன்று மாதங்களில் அமைக்கப்படும்.

இம் மூன்று மட்டக் குழுக்களும் மக்களுக்கு, சமூகத்திற்கு தீங்கு விளைவிப்போருக்கு எதிராக பொலிஸாருடன்இணைந்து சட்ட நடவடிக்கை எடுப்பர் என்றார்.

(ச-5)

PC SYSTEMS
PCs Total IT Solution Providers
சகலவிதமான CDMA இணைப்புக்களையும் பெறமுடியும்
Dialog CDMA இணைப்பு
2000/= Reload இலவசம்
Dialog CDMA Package 300/=
வெளிச்செல்லும் அழைப்புக்கள் 1800 நிமிடங்கள் இலவசம்.
இலகுவாகவும் விரைவாகவும் உடனடி இணைப்பை பெற இன்றே நாடுங்கள்
5999/=
ஆலடிச் சந்தி, யாழ் வீதி, மானிப்பாய்.
இல.24, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
வெளிநாட்டு அழைப்புக்கள் நிமிடத்திற்கு 3/= மட்டுமே
Internet Browsing மணித்தியாலத்திற்கு 40/= மட்டுமே
PC Systems Alady Junction Manipay.
(C-2907)

கிருபா லேனர்ஸ்
புதிய நடைமுறையிலான சாரதி அனுமதிப் பத்திரத்தை (சிமாட் காட்)பெற சிறந்த வாகனப் பயிற்சிகளையும் மற்றும் எழுத்துப் பரீட்சைக்குரிய
விசேட வீதி ஒழுங்கு வகுப்புகளையும் நடாத்தும் முன்னணி சாரதி பயிற்சிப்பாடசாலை தற்போது அதன் கிளை நிறுவனம் நெல்லியடியில் இயங்குகிறது
நெல்லியடியில் அனைத்து வாகனங்களுக்குமான பயிற்சி வழங்கப்படும்.
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353
உரிமையாளர்:- A.கிருபாகரன்
கிளை
மகாத்மா வீதி, நெல்லியடி
0777225292
நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்
(3014)

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
உள்நாடு, வெளிநாடு களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள். CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
வாடிக்கையாளர் நலன்கருதி 10% - 25% விசேட கழிவு
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு
3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும், கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை
குறிப்பிட்ட முகவரியில் பெறப்படும்
(C-2910)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.